விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 12 புதன்கிழமை (28.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314

இலங்கையில் கொரோனா உச்சம்

## 19 வயது இளைஞன் உட்பட
# ஒரே நாளில் மூவர் உயிரிழப்பு
## பலி எண்ணிக்கை 19ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸினால் நேற்று மட்டும் மூவர் உயிரிழந்துள்ளனர்.
19 வயது இளைஞன் உட்பட மூவர் உயிரிழந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
கொரோனாவின் உச்ச நிலைமையைக் கட்டுப் படுத்த முடியாமல் இலங்கை அரசு தடுமாறி வருகிறது.
(23ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் ரக்பி வீரருக்கு கொரோனா

(கொழும்பு)
கடற்படை விளையாட்டுக் கழகத்தின் ரக்பி வீரர் ஒருவர் கொரோனாத் தொற்றிற்கு உள்ளாகி
23

## கொரோனா 2ஆம் அலையின் வீரியம் அதிகம் என்பதால் சமூகத்தில் வேகமாகப் பரவுகின்றது
### தொற்று நோய் தடுப்புப்பிரிவு எச்சரிக்கை



(கொழும்பு)
நாட்டில் இரண்டாம் அலையாக உருவாகியுள்ள கோவிட் - 19 வைரஸ் தொற்றின் வீரியம் அதிகம் என்பதால் மிக வேகமாக சமூகத்தில் பரவும் என தொற்று நோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.
கோவிட் - 19 வைரஸ் பரவல் சமூக பரவலாக மாற்றம் பெற்றுள்ளதாக தொடர்ச்சியாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் நாட்டின் நிலைமை குறித்து தெளிவுபடுத்துகையில் அவர் இவற்றைக் கூறினார்.
23

## கத்திமுனையில் அச்சுறுத்தி 15 பவுண் நகை கொள்ளை
### கரணவாய் மேற்கில் சம்பவம்

(கரணவாய்)
வீட்டிலிருந்தோரை கத்தி முனையில் அச்சுறுத்தி 15 பவுண தங்க நகைகளை ஐந்து பேர் கொண்ட கும்பல் ஒன்று கொள்ளையிட்டு சென்றுள்ளது.
நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை
23

## வயாவிளான் மத்திய கல்லூரியில் கிளைமோர் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழப்பாணம் - வயாவிளான மத்திய கல்லூரி வளாகத்தில்
23

## அச்சுவேலியில் கார் மின்கம்பத்துடன் விபத்து
### ஒருவர் உயிரிழப்பு



(கரணவாய்)
வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்
23

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் நேற்று இலங்கை வந்தடைந்தார்
### கோட்டா, மகிந்தவை இன்று சந்திக்கவுள்ளார்



(கொழும்பு)
அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பம்பியோ 2 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று இலங்கையை வந்தடைந்தார்.
இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ்
23

இறுக்கமான சுகாதார நடைமுறையுடன்
## குருநகர், பாசையூருக்கு செல்ல இன்று முதல் அனுமதி

(யாழ்ப்பாணம்)
குருநகர், பாசையூர் பகுதி மற்றும் மீன் சந்தைகளில் இன்றிலிருந்து சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்
23

## பூநகரியில் திடீரென கடல் பெருக்கெடுப்பு
### 40 ஏக்கர் வயல்நிலம் உவர் நிலமாகியது

(பூநகரி)
கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் திடீரென கடல் பெருக்கெடுத்துள்ளது. இதனால் சுமார் 40 ஏக்கர் வரையானவயல் நிலங்களும் உவர்
23


## நாட்டில் நேற்று மட்டும் 457 வைரஸ் தொற்றாளர்கள்

(கொழும்பு)
நாட்டில் நேற்று மட்டும் 457 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை நேற்று இரவு கண் டறியப்பட்டுள்ளது.
இதன்மூலம் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா வைரஸ் பரவல் கொத்தணியை அடுத்து 5 ஆயிரத்து 396 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 8 ஆயிரத்து 870 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
(ம-3)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 48 மணி நேரத்தில் தாதியர்களுக்கு அரசு தீர்வு முன்வைக்க வேண்டும்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



(கொழும்பு)

தாதியர்கள் தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு இன்னும் இரண்டே தினங்களில் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என கொழும்பு - நாரஹென்பிட்டிய அபயராமய விகாரையின் விகாராதிபதியும், ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவருமான முருந்தெட்டுவே ஆனந்த தேரர் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதற்கு அரசாங்கத்திற்கு 48 மணி நேர காலக்கெடுவையும் தேரர் விதித்துள்ளார்.

48 மணி நேரத்திற்குள் தீர்வை வழங்காவிட்டால் பாரிய வேலைநிறுத்தம் ஒன்றை நடத்த நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியில் தாதியர்களில் பலருக்கு வழங்க வேண்டிய மேலதிக கொடுப்பனவுகள், போக்குவரத்து என பல விடயங்கள் தடைபட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக நாடு முடக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் தவறாமல் பணியில் ஈடுபட்ட தாதியர்கள் பலருக்கு தேவையான வசதிகளை அரசாங்கம் வழங்கத் தவறிவிட்டதாக சிங்கள இணையத்தளமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தேரர் தெரிவித்துள்ளார். (ம-03)

# கொரோனாப் பரவல் அச்சம் காரணமாக வெளிவாரிப் பரீட்சைகள் ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

கொரோனாப் பெருந்தொற்று அச்சத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு யாழ். பல்கலைக்கழக வெளிளிவாரிப் பரீட்சைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு நேற்றிரவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) மூன்றாம் வருட, இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதுடன், அதற்கான அனுமதி அட்டைகள் வழங்கும் பணியும் இடம்பெற்றது.

இந்த நிலையில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பரீட்சார்த்திகள் பலர், மாவட்டங்களைக் கடந்து வர முடியாத நிலை காணப்படுகின்றமை பற்றி ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, நிலைமைகள் சீராகும் வரை பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளருக்குத் துணைவேந்தர் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்.

இதே நேரம், பரீட்சை ஒத்திவைப்பு, மறு திகதியிடல் பற்றிய விபரங்கள் பகிரங்க அறிவித்தல் மூலமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணைய வழித் தகவல்களுக்கூடாகவும் வெளியிடப்படும், பரீட்சைகள் பற்றிய மேலதிக தகவல்களை 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (ம-03)

# வடமராட்சியில் விபத்து; இரு இளைஞர்கள் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி நாவலர் மடம் பகுதியில் நேற்று மாலை இரண்டு உந்துருளிகள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவலர்மட உப வீதியில் இருந்து உந்துருளியில் வந்த இரண்டு யுவதிகள் பிரதான வீதிக்கு ஏறியபோது கரவெட்டி பிரதேச செயலகப் பக்கத்தில் இருந்து நெல்லியடி நோக்கி அதி வேகமாகக் சென்ற உந்துருளி மோதி விபத்துக்குள்ளானது.

இதில் இளைஞர்கள் பயணித்த உந்துருளி சுமார் இருபது மீற்றர் தூரம் இழுத்துக் செல்லப்பட்டது. இதில் உந்துருளியில் பயணித்த பொலிகண்டியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பில் நெல்லியடி போலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-03.60)

# நாட்டை முடக்காமல் நகரங்களை முடக்குவது பொருத்தமானதல்ல

## இராதாகிருஸ்ணன் எடுத்துக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும் 20ஆவது திருத்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் கொரோனாவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

இன்று தம்முடைய அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்து கொண்ட பின்பு அதனை கட்டுப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் கொரோனா கட்டுக்கடங்காமல் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக மலையக பகுதிகளிலும் ஏனைய மாவட்டங்களிலும் பாரிய அளவில் தொற்று அதிகரித்து வருகின்றது.

ஒரு சில நகரங்களை மாத்திரம் மூடுவதனால் இதனை கட்டுப்படுத்த முடியாது. ஏற்கெனவே இந்த வருடத்தின் ஆரம்பத்தில் அதாவது மார்ச் மாதம் அளவில் மிக குறைவான கொரோனா தொற்றாளர்களே இலங்கையில் இருந்தனர். இதன்போது முழு நாட்டையும் முடக்கி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள்.

ஆனால் இன்று பல மடங்காக கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டை முடக்காமல் ஒரு சில நகரங்களையும் ஒரு சில பகுதிகளையும் மாத்திரம் முடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது எந்தளவு பொருத்தமான செயற்பாடு என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றார். (ம-03)

ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவமிக்க ஆசிரியரால்
உங்கள் வீடுகளுக்கு வந்து
கற்பிக்கப்படும். (4488)
T.P: 077 658 9443
யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்

தோற்றம்
31 – 10 – 1936



மறைவு
27 – 10 – 2020

## வேலுப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர்)

குரும்பகட்டி, புலோலி வடமேற்கு, புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை நேற்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னாத்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பசுபதி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமலரின் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ ஹாட்லிக் கல்லூரி) அன்புக் கணவரும் பாரதிதாசன், காயத்திரி (சிங்கப்பூர்), சங்கீதா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - கரவெட்டி ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருவருட்செல்வி (சமுர்த்தி வங்கி முகாமையாளர் - மருதங்கேணி), நவலிங்கம் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கபிலன் (பட்டதாரி பயிலுநர், பிரதேச செயலகம் - கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, பசுபதி, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசுப்பிரமணியம் (கொலண்ட்), பேராசிரியர் சிவநாதன் (யாழ். பல்கலைக் கழகம்), சிவராணி (UK), சிவயோகமணி (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் அமிர்ணா (சிங்கப்பூர்), ஜனார்த்தனி, சங்கீர்த்தனி, ஜனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-593)

குரும்பகட்டி,
புலோலி வடமேற்கு, புலோலி.

தகவல்:-
குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வில் ஓராண்டு நிறைவில்

தோற்றம்
03 . 02 . 1948



மறைவு
28 . 10 . 2019

## அமரர் முருகேசு அற்புதம்

" வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம் " (உரோ.14:07)

அன்புத் தெய்வமே!

இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு உம்மிடம் வந்த எம் அன்னைக்காக வேண்டுகின்றோம். இவ்வுலகில் இவர் உமக்கெதிராகச் செய்த பாவங்களை மன்னித்து உமது வான் வீட்டில் சேர்த்தருளுமாறு மன்றாடுகிறோம். ஆமென்

மாதா கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி. (C-590)

குடும்பத்தினர்

# நாட்டின் இறைமையை பாதிக்கும் ஒப்பந்தங்கள் எதனையும் செய்யமாட்டோம்- கெஹலிய

(கொழும்பு)

**நாட்டின் இறைமையை பாதிக்கக்கூடிய வகையிலான வர்த்தக உடன்படிக்கைகள் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் போம்பியோ இலங்கை விஜயம் செய்ய உள்ள நிலையில், எதிர்க்கட்சியினர் அரசாங்கம் அமெரிக்காவுடன் ஒப்பந்தங்களை செய்து கொள்ளவுள்ளதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

இந்நிலையில், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்கியுள்ளார்.

அதில், இலங்கையிடமிருந்து அதிகளவு பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளும் நாடாக அமெரிக்கா தொடர்ந்தும் திகழ்வதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு நன்மை அளிக்கக்கூடிய உடன்படிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், நாட்டின் இறைமையை பாதிக்கும் எவ்வித உடன்படிக்கை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படாது என அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# வெளிநாட்டவர்களின் விசா காலம் நீடிப்பு

(கொழும்பு)

நாட்டில் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டவர்களினதும் விசா காலம் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விசாக் கட்டணம் மற்றும் விசாவைப் பெறுவதற்கான காலம் பின்னர் அறிவிக்கப்படும் என குடிவரவு- குடியகல்வு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாவினைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் விசா பிரிவுக்கு சமுகமளிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

எந்தவொரு வெளிநாட்டவரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறினால், விமான நிலையத்தில் விசாவுக்கான கட்டணத்தை தண்டப்பணமின்றி செலுத்த வேண்டும் எனவும் குடிவரவு- குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-7)

# எல்லை நிர்ணயக் குழு நியமிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பிரதேச செயலக பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகியவற்றை புதிதாக ஸ்தாபித்தல், தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளவற்றை வர்த்தமானியில் அறிவித்தல், அவற்றை மீளாய்விற்கு உட்படுத்தல் போன்றவற்றிற்கு எல்லை நிர்ணய குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பின் போது இந்த விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை, கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் மத்திய வகுப்பு தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கான கடன் வசதியினை பெற்றுக்கொடுப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடையை பெறுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியூடாக 165 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை பெற எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ருமேனியா மற்றும் ஸ்பெயினில் இலங்கைக்கான தூதரகங்களை ஸ்தாபிக்க வெளிவிவகார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னாரில் காற்று மின்னுற்பத்தி திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 200 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 100 மெகவாட் காற்று மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (நி-7)

# ஸ்பெயின்,ருமேனியாவில் இலங்கைத் தூதரகங்கள்

(கொழும்பு)

ஸ்பெயின் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளில் இலங்கைத் தூதரகங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ருமேனியா மற்றும் இலங்கைக்கு இடையில் 1957 ஆம் ஆண்டிலிருந்து இராஜதந்திர உறவுகள் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தற்போது இரு நாடுகளுக்கும் இடையே ஆரோக்கியமான இருதரப்பு தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

அதேபோல் இலங்கைக்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் 1955ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையேயான தொடர்புகளை மேலும் மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் இரு நாடுகளிலும் இலங்கைத் தூதரக அலுவலகத்தை அமைப்பதற்காக வெளிநாட்டு அமைச்சர் யோசனை சமர்ப்பித்திருந்தார். இந்த நிலையிலேயே குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(அக்கராயன்)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மீன் வியாபார பகுதியில் 60 வியாபாரிகளிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மாதிரிகள் நேற்று பெறப்பட்டன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் மேற்படி மாதிரிகள் பெறப்பட்டன.

பேலியகொட மீன் சந்தையில் ஏற்பட்ட கொரோனா தொற்று பரவல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இரு வருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. எனவே அதனை கருத்தில் கொண்டு முன்னாயத்த நடவடிக்கையாக கிளிநொச்சிமீன் சந்தையிலும் 60 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. (5-4-350)

# குணமடைந்தோர் 4043

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து நேற்று மேலும் 110 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 4,043 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

# ஜனாதிபதியால் நியமிக்கவும் முடியும் நீக்கவும் முடியும்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு வலுவானதொரு நிர்வாகத்தை முன்னெடுக்க 20ஆவது திருத்தம் வழியமைத்துள்ளது. இதனால் அரச இயந்திரத்தை சிறப்பாக இயங்க வைக்க முடியும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தேர்தல்கள், பொது சேவை, மனித உரிமைகள் மற்றும் ஊழல் விசாரணைக்கு பொறுப்பான சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் ஜனாதிபதி நியமிக்கவும் பதவி நீக்கம் செய்யவும் முடியும்.

பொதுத் தேர்தலுக்கு இரண்டு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்தத் திருத்தத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சட்டத்தின் பல பிரிவுகள் ஜனாதிபதி அதிகாரத்தை பலப்படுத்தும் உயர் நீதி மன்றத்தில் கூறப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டமையால் சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை எனத் தெரிவித்தார்.

அரசியலமைப்பை மாற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆளும் கட்சிக்கு இல்லை என்றாலும், பாராளுமன்றத்தில் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர் என நீதி அமைச்சர் தெரிவித்தார். (நி-7)

# ராஜதந்திரிகளை தனிமைப்படுத்தும் அவசியமில்லை- சுதத் சமரவீர

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அதிகளவில் பரவி வரும் அமெரிக்காவில் இருந்து வரும் ராஜதந்திரிகளை இலங்கையில் 14 நாட்கள் தனிமைப்படுத்தும் அவசியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

24 மணி நேரத்திற்குள் ஒரு சிலரை சந்திக்கவே அவர்கள் வருகின்றனர் என்பதால், அவர்களை தனிமைப்படுத்தும் அவசியமில்லை. இவர்கள் தமது நாட்டில் இருந்து புறப்படும் முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை வந்த பின்னரும் சுகாதாரத்துறையினர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

கிழக்கு கடல் பரப்பில் கப்பல் ஒன்றில் தீப்பிடித்த போது ராஜதந்திர ரீதியில் செயற்பட்ட விதம் இதற்கு சிறந்த உதாரணம். தனிமைப்படுத்தல் என்பது நோய் பரவுவதை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை. இந்த ராஜதந்திரிகள் ஊடாக கொரோனா பரவாது என்ற நம்பிக்கையில் அவர்கள் வருகின்றனர் எனவும் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# "வேற்றுமையில் ஒற்றுமை" எனும் சமஷ்டி அமைப்பை சிங்கள மக்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

"வேற்றுமையில் ஒற்றுமை" என்ற சமஷ்டி அமைப்பை சிங்கள மக்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார். தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை Zoom தொடர்பாடலின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் ஆற்றல் மேம்பாட்டிற்கு நான் வகுத்திருக்கும் வரைபடமானது எமது அடிப்படை முத்திரை மொழியாக நாம் வகுத்திருக்கும் தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு பால்பட்டதாகும். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறுகின்றேன்.

தன்னாட்சி என்று கூறும் போது நாம் இதுவரை காலமும் கோரி வந்த தனிநாடு என்ற கோரிக்கைக்கு மாறாக முன்னர் தந்தை செல்வா கோரி வந்த சமஷ்டி முறையிலான தன்னாட்சி பெற்ற ஒரு அலகையே குறிப்பிடுகின்றோம். எமது உள்நாட்டு மற்றும் புலம்பெயர் உறவுகளும் சிங்கள சகோதரர்கள் பலரும் நாம் இன்னமும் தனிநாட்டைக் கோருவதாகவே கற்பனை பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். பூகோள அரசியலின் காரணமாக அவ்வாறான ஒரு நிலை ஏற்படக் கூடும் என்பது வேறு விடயம். ஆனால் நாம் எமது கொள்கையாகக், குறிக்கோளாக வகுத்திருப்பது "வேற்றுமையில் ஒற்றுமை" என்னும் சமஷ்டி அமைப்பையே. அதனைச் சிங்கள மக்கள் நாட்டைப் பிரிப்பதாகக் கற்பனை பண்ணுகின்றார்கள். அவர்கள் மத்தியில் புரிந்துணர்வை நாம் ஏற்படுத்த வேண்டும். எமது மக்களும் சில விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் சூழலுக்கு ஏற்றவாறு எமது கொள்கைகளை வகுத்தே முன்னேற வேண்டும். இலங்கை நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் கொண்டு வரமுடியாது என்று எம்முள் பலர் முடிவெடுத்திருப்பது சென்ற கால நிகழ்வுகளின் அடிப்படையிலேயே. முன்னர் எமக்கு நடந்தவற்றிற்கு சிங்களப் பொது மக்கள் எந்தளவுக்குத் துணைபோனார்கள் என்பதை அவர்கள் அக்கால கட்டத்தில் மௌனிகளாக இருந்ததை வைத்தே எடைபோடுகின்றோம். ஆனால் அவர்கள் மௌனிகளாக இருந்ததற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக அவர்களுக்கு எம்மீது ஏற்படுத்தப்பட்ட தப்பபிப்பிராயங்கள் அவர்கள் மனதில் இதுகாறும் வேலை செய்து வந்தன. இலங்கை சிங்கள பௌத்த நாடு, பௌத்தம் வரமுன் இந் நாடு அரை மனிதர்கள் வாழ்ந்த நாடு என்றெல்லாம் மகாவம்ச சிந்தனையில் சிங்கள மக்கள் இதுகாறும் வாழ்ந்து வந்துள்ளார்கள். தமிழர் சோழர் காலத்து வந்தேறுகுடிகள். தமக்கிருக்கும் உரித்துக்களுக்கு மேலதிகமாக அவர்கள் உரிமை கொண்டாடுகின்றார்கள் என்பது சிங்கள மக்களின் எண்ணம். இதையெல்லாம் மாற்றவே நான் இலங்கையின் மூத்த குடிகள் தமிழரே என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்தேன்.

ஆகவே சிங்கள மக்களுக்கு எதிரான ஒரு சிந்தனையில் பயணிக்காது உண்மையின் பாற்பட்டு நாம் பயணித்து எமக்குரிய தன்னாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெறவேண்டும் என்பதே எனது குறிக்கோள். இதற்கான வரைபடம் பல விதமாக, பல கோணங்களில் இருந்து தயாரிக்கப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

முதலாவது அறிவு ரீதியான, அனுபவ ரீதியான கலந்துரையாடலின் அடிப்படையில் புலத்தில் உள்ளோர் புலம்பெயர்ந்துள்ளோர் மத்தியில் இருந்து புத்திஜீவிகளை தேர்ந்தெடுத்து உள்ளடக்கி குழுவொன்று அமைத்து வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். எம் வசம் இருக்கும் சிந்தனைகளை அந்தக் குழுவை உரைகல்லாகப் பாவித்து தீட்டி எடுத்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

தன்னாட்சி என்ற அரசியல் இலக்கைப் பெற நாம் பாவிக்க இருக்கும் மற்றைய ஆயுதங்கள் தற்சார்பும் தன்னிறைவும் ஆவன. தற்சார்பு என்பது நாம் எம்மைச் சார்ந்து செயற்படுவது. முதலில் அதற்கு எம்மிடையே அறிவுபூர்வமான ஒற்றுமை வேண்டும். நாம் சுயநலம் களையாவிட்டால் மக்கள் நலம் எம் கையைவிட்டுப் போய்விடும். யூதர்களைப் பார்த்து நாம் எம்மை ஒற்றுமைப்படுத்த, பலப்படுத்த முன்வரவேண்டும்.

எமது உரிமைகளை வென்றெடுக்க உலகளாவிய சிந்தனைக்கூடம் ஒன்றைக் கட்டி எழுப்ப வேண்டும். மேலும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடுகளுக்காக ஆய்வு நிறுவனங்கள், அபிவிருத்தி நிதியங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக சில அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் தான் இந்த நம்பிக்கைப் பொறுப்பு அமைப்புக்குப் பொறுப்பாக முன்னாள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி வகித்த, மேலும் சமாதானப் பேச்சுவார்த்தை காலத்தில் உடனடி மனிதாபிமான சேவைகளுக்கான உப குழுவுக்குப் பொறுப்பாக இருந்த நண்பர் செல்வின் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இதனைச் சேவையாகக் கருதியே செயற்பட்டு வருகின்றார். **Subcommittee for Immediate Humanitarian Needs** என்பதை **SIRHN** என்று அழைத்தார்கள்.

நாம் எமது நடவடிக்கைகளில் இறங்கும் போது நன்கு ஆராயப்பட்ட உத்திகளின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும். நிறுவனமயப்படுத்தப்பட்ட கூட்டுச் செயற்பாடுகளே இனி எமக்கு விடிவைக் கொடுக்கும். யூதர்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட கூட்டுச் செயற்பாடுகளே அவர்களின் இன்றைய மேன்மை நிலைக்குக் காரணம்.

சமஷ்டிக்காக நாம் அரசியல் ரீதியாகப் பயணிக்கும் போது எமது பலம் குன்றிய சமூக அலகுகளையும் நாம் எம்முடன் கூட்டிச் செல்வது அவசியமாகும். இவற்றில் குறிப்பாக மக்கள் போராட்டங்களை மேற்கொள்வதும், அரசியலில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை உள்வாங்கி செயற்படுவதும் முக்கியமானவை. எமது புத்திஜீவிகளை உள்வாங்குவதும் முக்கியமானதாகும்.

தற்சார்பு என்று நாம் கூறும் போது வடக்கு, கிழக்கின் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் தகவல்களைத் திரட்டுவதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் வாய்ப்புக்களை இனங்காண்பதற்கும் "பொருளாதார ஆய்வு நிலையம்" ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக எமது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தோம். இதற்குப் புலம்பெயர் தமிழ் மக்களின் நிதி உதவியும் நிபுணத்துவமும் அவசியம். இந்த நடவடிக்கையினை முடிந்தளவு விரைவில் நாம் மேற்கொள்வோம்.

முக்கியமாக கல்வி மேம்பாடு அவசியமானது. வடக்கு-கிழக்கில் வீழ்ச்சியடைந்துள்ள க்ல்வித்தரத்தை உயர்த்தி மீண்டும் அதனை முதல் இடத்துக்கு கொண்டு வருவதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் உயர் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், கூடுதலான மாணவர்கள் அதனைப் பெறுவதற்குமான நடவடிக்கைகளில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

முன்னாள் போராளிகள் மற்றும் மாற்று வலுவுள்ளோருக்கு புலம்பெயர் தமிழ் மக்களே கணிசமான உதவிகளை அவர்களுக்குக் கடந்த காலங்களில் செய்துள்ளார்கள். இவர்களுக்கான விசேட திட்டம் ஒன்றை தயாரித்து முக்கியமான சில வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளையும் பெற்று நடைமுறைப்படுத்த ஆவன செய்வோம். மாற்றுவலுவுள்ளோர் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். இந்த திட்டங்களை தமிழ் மக்கள் நம்பிக்கை பொறுப்பின் கீழ் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றோம்.

வடக்கு-கிழக்கில் வாழ்ந்துவரும் 90,000 வரையிலான விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். இதற்கு முன்னோடியாக "தேவைகள் மதிப்பீடு" ஒன்றை விதவைகள் மத்தியில் நாம் விரைவில் நடத்த இருக்கின்றோம். இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன. முன்னர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் செய்த தேவைகள் மதிப்பீடு இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை ஆகிய மூன்று பிரதான தொழில் துறைகளிலும் நாம் மறுமலர்ச்சி காண்பதற்கு அதிகளவு முதலீட்டை கொண்டு வருவதுடன் நவீன தொழில்நுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தும் நிலையையும் உருவாக்க வேண்டும். இவற்றை செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய சிறப்பு வரப்பிரசாதங்களை சிறந்த முறையில் நாம் பயன்படுத்துவதுடன் தமிழக அரசாங்கம், தமிழக பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றினதும் தமிழக முதலீட்டாளர்களினதும் பங்களிப்புக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இவற்றை எல்லா தமிழ்த்தேசிய கட்சிகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டும். இதற்கான சகல ஒத்துழைப்பையும் நான் வழங்குவேன்.

எமது வலுவூட்டல் நடவடிக்கைகளில் நாம் மலையக மக்களையும் மறந்துவிடக்கூடாது. புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியைப் பெற்று மலையக அரசியல்வாதிகளுடன் இணைந்து அவர்களுக்கான சில அபிவிருத்தி செயற்றிட்டங்களை நாம் முன்னெடுக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

முக்கியமாக, தமிழக முகாம்களில் அகதிகளாக வாழும் பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் தாயகம் திரும்ப வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால், எத்தகைய சமூக, பொருளாதார நிபந்தனைகளின் கீழ் அவர்கள் தற்போது வாழ்கின்றார்கள் என்பதை கவனத்தில் கொண்டே இதைச் செய்ய வேண்டி இருக்கிறது. அங்குள்ள மக்களை அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மீண்டும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் குடியேற நடவடிக்கைகள் எடுப்பது பல்வேறு வழிகளில் அவசியமானதாக இருக்கின்றது.

கடைசியாக நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டியது தன்னிறைவு என்ற மேம்பாட்டை. நாம் எம்மை வலுவூட்டும் அதே சமயம் மற்றவர்களையே எந்த நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எமது வழக்கத்தை நாம் மாற்ற வேண்டும்.

எங்கள் பாரம்பரிய கலை கலாசாரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் வளர்ந்த சமூகங்களுக்குரிய புதிய கலை வடிவங்களை தோற்றுவிப்பதற்கான ஆலோசனைகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும். உயிர்ப்புள்ள சமூகமாக நாம் மாற இவை அவசியம்.

**O/L, A/L** பரீட்சைப் பெறுபேறுகளை அளவுகோலாக வைத்து வடக்கு-கிழக்கில் கல்வித் தரம் வீழ்ந்துவிட்டது என்று கணிப்பிடப்படுகின்றது. எனவே இப்பெறுபேறுகளை உயர்த்துவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் போல பரீட்சைக்கான தயார்படுத்தல் கல்வி நடவடிக்கை முழு அளவில் நடைபெற வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் படிப்படியாக அதிகரிப்பதற்கு மாவட்ட கோட்டா அனுமதியும் அந்தந்த சமூகங்களின் ஊக்கமும் கல்வி பற்றிய விழிப்புணர்வும் காரணமாகின்றன. ஆனால் எமது இளம் சமூகம் கற்பதைவிட்டு களியாட்டங்களில் அதிக கரிசனை காட்டுகின்றனர். இந்நிலையை நாம் மாற்ற வேண்டும்.

எமக்கு அவசியமான உயர்கல்வி புலமைப்பரிசுகள் வழங்குதல் வேண்டும். இவையாவும் எம்மக்களைத் தன்னிறைவை நோக்கிக் கொண்டு செல்லும் தன்மை வாய்ந்தன. இவற்றையெல்லாம் நான் செய்து முடிக்க எனக்கு திறம்மிகு உதவியாளர்கள் தேவை. சுயநலம் களைந்த உதவியாளர்கள் தேவை. அவர்களின் துணைகொண்டு எமது தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு நடவடிக்கைகளில் வெற்றி பெற முடியும் என்று நான் முற்றாக நம்புகின்றேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)


# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை அருணகிரிராஜா

(ஓய்வு பெற்ற வர்த்தக முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்)

**தோற்றம் 10-05-1942**

**மறைவு 26-10-2020**



யாழ்.கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கிருஸ்ணபிள்ளை அருணகிரிராஜா** நேற்று முன்தினம் (26.10.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணசாமி அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மற்றும் அதிரூபவதி அவர்களின் அன்புக் கணவரும், பவானி, காலஞ்சென்ற இந்துமதி மற்றும் நளாயினி (சுவிஸ்), சிறிதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), துஸ்யந்தன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குணசிங்கராஜா, மற்றும் நடராஜா, காலஞ்சென்ற சிவராஜா மற்றும் தவராஜா, செல்வராஜா, சண்முகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வரதராஜன், நிவேதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், புகலேஸ்வரன், தங்கேஸ்வரன், இலங்கேஸ்வரன், காலஞ்சென்றவர்களான அழகேஸ்வரன், சிவனேஸ்வரன், கருணேஸ்வரன், சாந்தேஸ்வரன், ஜெயநாயகவதி, காஞ்சனாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷான் (சுவிஸ்), ஆகாஷ் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(c-589)

கம்பர்மலை,
யாழ்ப்பாணம்.

சிறிதரன் +94778236845
துஸ்யந்தன் +32493320541
நளாயினி +41718411960

தகவல்
குடும்பத்தினர்.

# “நிறைவான சேவையில் வளமான கிராமம்”

(சாவகச்சேரி)


தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளின் பிரதான வாசகங்களில் (தொலை நோக்கு) மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரி நகர சபையின் தொலை நோக்காகக் காணப்பட்ட “நல்லாட்சியே நகராட்சி” என்ற வாசகத்திற்கு பதிலாக “நிறைவான சேவையில் வளமான நகரம்” என்ற தொலைநோக்கு வாசகம் பொதுமக்களின் பெரும்பான்மை விருப்பிற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சாவகச்சேரி பிரதேச சபையும் தனது தொலைநோக்கினை “வளமான தென்மராட்சியில் நிறைவான கிராமங்கள்” என மாற்றியமைத்துள்ளது.

குறித்த தொலைநோக்கு வாசகத்தை தெரிவு செய்ய ஐந்து வாசகங்கள் சபையினால் பரிந்துரைக்கப்பட்டு அவை மக்களின் கருத்துக்களைப் பெற காட்சிப்படுத்தப்பட்டு அதில் அதிக விருப்புக்களைப் பெற்ற ஒரு வாசகம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# யாழில் 101 பேருக்கு நியமனக்கடிதங்கள்



(சாவகச்சேரி)

சுபீட்சத்தின் நோக்கு என்னும் தொனிப்பொருளின் கீழ் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிற்குள் முதற்கட்டமாக உள்வாங்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் இருந்து 101 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

மேலும் நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிற்குள் உள்வாங்கப்பட்டவர்கள் ஆறு மாத காலப் பயிற்சி நெறியின் பின்னர் திறனுக்கு ஏற்ற தொழிலுக்கு இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18-30-101)

# அரசாங்கத்தை தமிழ் மக்கள் புரிந்துகொள்வர்

## அங்கஜன் நம்பிக்கை



(சாவகச்சேரி)

தமிழ் மக்களுக்கு பொய்யான தகவல்களைக் கூறி அவர்களையும் அரசாங்கத்தையும் பிரித்து கிடைக்கும் நன்மைகளையும் அரசுக்கு எதிரான தமிழ் கட்சிகள் கிடைக்க விடாமல் செய்கின்றன எனப் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட ஒரு இலட்சம் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான வேலைத்திட்டத்தை யாழ்.மாவட்டத்திலும் வழங்கி வைப்பதில் மகிழ்வடைகிறேன்.

இந்த வேலைத்திட்டம் ஒரு குடும்பத்தை அடுத்த தலைமுறை நோக்கி எடுத்துச் செல்ல உதவும்.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களை மேலும் முன்னேற்ற இத்தொழில்வாய்ப்பு உறுதுணையாக அமையும் என நம்புகிறேன்.

முதன்முறையாக எந்தவொரு அரசாங்கமும் முன்னெடுக்காத வேலைத்திட்டம் ஒன்றினை இந்த அரசாங்கம் முன்னெடுத்து க.பொ.த.சாதாரண தரம் கற்று முடிக்காதவர்களுக்கு தொழில்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டதாக அரசியல்வாதிகள் சிலர் கூறிய விடயங்கள் ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

இந்நிலையில் தமிழ்க்கட்சிகள் தவறான தகவலை மக்களுக்கு வழங்கி மக்களை திசை திருப்புகின்றனர்.

இந்நியமனங்கள் மூலம் மக்கள் அரசாங்கத்தை புரிந்து கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# மரக்கன்று வழங்கும் திட்டம் ஆரம்பம்



(சாவகச்சேரி)

வீட்டுப் பொருளாதார போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டம் பிரதேச செயலர் பிரிவுகளூடாக யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மரக்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகள், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கி வைத்தனர். (5-4-30)



வடமராட்சி, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான நுழைவாயிலின் வளைவு கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று திறந்து வைக்கப்பட்டது. பாடசாலையின் பழைய மாணவன் ஐ.சிவசுந்தரத்தினால் அமரத்துவமடைந்த அவரின் தாய் ஐ.கனகம்மா மற்றும் சகோதரன் ஐ.பசுவன் ஆகியோரின் நினைவாக இந்த வளைவு அமைக்கப்பட்டது, பாடசாலை முதல்வர் த.செல்வக்குமார் தலைமையில் இந்த நிகழ்வு மிகவும் எளிமையாகத் நடைபெற்றது. (படம்:- நெடுங்கீரன்)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் 6 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இரத்ததான முகாம்களின் வரிசையில், தற்போது இரத்த வங்கிகளில் நிலவும் குருதித் தேவைகளை கருத்தில்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 30 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே குருதிக்கொடையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4)




# ஏலவிற்பனை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இன்று 28 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவிருந்த மணல் ஏலவிற்பனையானது பிற்போடப்பட்டுள்ளது எனவும் ஏலவிற்பனை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# 20 ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவு நஸீருக்கு உலமா கட்சி பாராட்டு



(கொழும்பு)

20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்டுக்கு உலமா கட்சி பாராட்டுத் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்டுடனான தொலைபேசி உரையாடலின் போது உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆவது திருத்த சட்டம் பாராளுமன்ற விவாதத்தின் போது முஸ்லிம் சமூகத்திற்கு ரணில், சஜித் அரசு செய்த அநியாயங்கள் பற்றி முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆற்றிய உரை மிக சிறப்பாக இருந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிறைவேற்று அதிகாரத்தை உறுதிப்படுத்தும் 20 ஆவது திருத்த யாப்புக்கு ஆதரவளித்தமை மிகச்சிறந்த செயலாகும்.

கோட்டா, மகிந்த தலைமையிலான இந்த அரசாங்கம் என்பது மிகவும் பலம் பொருந்திய அரசாங்கம்ாகும்.

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் கூட அரச கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கும் போது முஸ்லிம்கள் மகிந்த அரசை எதிர்க்க எந்த நியாயமும் இல்லை எனப் பாராட்டியுள்ளார். (ஐ-4)

# தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, தனியார் துறை ஊழியர்களுக்கு ஆகக் கூடிய சம்பளத்தை வழங்கும் முறையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு Zoom மூலம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன தெரிவிக்கையில், நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியார்துறை ஊழியர்கள் சம்பளம் குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக ஏற்கனவே இதற்காக அமைக்கப்பட்ட செயலணிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட இவர்களுக்கான சம்பள நடைமுறையை இவ்வருடம் செப்டெம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கான கோரிக்கையை அரசாங்கம் தனியார். துறையினருக்கு விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

- கொரோனா வைரஸ் தொற்றால் வேலை நிறுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் ஊழியர்களை தொழிலிலிருந்து நீக்காமல் இருத்தல்
- சமூக இடைவெளியைப் பேண வேண்டியிருப்பதால், நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களையும் பணியில் அமர்த்துவதற்கு இயலாது போவதால் ஊழியர்களை நேரசூசி அடிப்படையில் அல்லது வேறு பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி சமமாக பணிபுரியும் வகையில் பணியில் அமர்த்துதல்.
- வேலை இல்லாததால் ஊழியர்கள் வீட்டில் தங்கியிருக்க நேரிடுவதால், நிறுவன ஊழியர்களுக்கு இறுதியாக செலுத்தப்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளத்தின் அடிப்படைச் சம்பளத்தின் 50 வீதம் அல்லது ரூபா 14,500 இரண்டிலும் மிகவும் நன்மையான தொகையைச் செலுத்தல்
- அவ்வாறு செலுத்தும் சம்பளத்திற்காக தொழில் வழங்குநரால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான செலுத்தல்களை மேற்கொள்ளல்

தற்போது கொரோனாத் தொற்று நாட்டில் பரவி வரும் நிலைமையில் இவ்வருடம் டிசெம்பர் மாதம் வ்ரை மேற் குறிப்பிட்டவாறு செயற்படவும் குறித்த செயலணி உடன்பாடு தெரிவித்துள்ளதாக தொழில் அமைச்சர் முன்வைத்த விடயங்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது. (ஐ-4)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 21 முஸ்லிம் கல்லூரி வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 217/19 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் ஜட்ரூஸ் மரிக்கார் சாகிபுடீன் எனும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 31.10.2019 ஆம் திகதி 11478 ஆம் இலக்கத்தில் ஓர் அறுதி உறுதி நிறைவேற்றப்பட்டு புத்தளம் மன்னார் வீதி 11 ஆம் குறுக்கு தெரு 2 ஆம் ஒழுங்கை இல:-27/19 ஐச் சேர்ந்த அபூபக்கர் அனஸ் கைம்பெண் ஆயிஷாபானு மறுநாமம் வசந்தி என்பவர் முகம்மட் சம்சுதீன் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த 11478 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு எஸ்.இளங்கோவன் முகதாவில் 18.03.2012 ஆம் திகதி 7281 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் புத்தளம் நாகவில்லு 354A, இட்ரூஸ் மரிக்கார் சகிபுடீன் ஆகியவர் 27/19 ஆம் 2 ஆம் ஒழுங்கை 11 ஆம் குறுக்கு தெரு மன்னார் வீதி புத்தளம் ஆயிஷாபானு அனஸ் அல்லது வசந்தி என்பவருக்கு சொரியலாக 1/2 வாசி ஆதனம் அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைக்கப்பட்டதாக உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 7281 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு மெ.பி.இப்திகார் முகம்மட் முகதாவில் 17.06.2009 திகதியில் 8957 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுல்தான் அப்துல் காதர் முத்துராசா மகள் குரைசா என்பவர் இட்ரூஸ் மரிக்கார் சகிபுடீன் க்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைப்பதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த 8957 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.சுல்தான் முகதாவில் 04.02.1967 ஆம் திகதியில் 5158 ஆம் இலக்க அறுதி உறுதியில் வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த தம்பி மரைக்கார் சுல்தான் அப்துல் காதர் கைம்பெண் மூசலும்மா வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுல்தான் அப்துல்காதர் முத்துராஜா மகள் குரைசாவிற்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைப்பதாக கூறப்பட்டுள்ளது.

இவ்வுறுதிகளிலே 7281 ஆம் இலக்க உறுதியும் அதன் முன்னுறுதிகளிலும் ஆதனம் முறையாக நிந்தப்படுத்தப்படாது சொரியலாக காணப்படுவதனால் அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிக்க இப்பத்திரிகை பிரசுரம் மேற்கொள்ளப்படுகிறது.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம். பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/87 வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "கள்ளியடி" விஸ்தீரணம் நில-4 இதில் சொரியலாக 1/2. இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்ரமணியம் அவர்கள் 26.09.2009 ஆம் திகதி தயாரித்த 1242 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டபடியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் குளி 6.15.

கிழக்கு:- அசனா மரைக்கார் பெண் றகுமத் நாச்சியாவினதும் மறுபேரினதும் ஆதனம்.
வடக்கு:- முத்து முகமதுவினதும் மறுபேரினதும் ஆதனம்.
மேற்கு:-ஜின்னா விளையாட்டு மைதானம்.
தெற்கு:- முகமது மொகிதீன் பக்கீரனதும் மறுபேரினதும் ஆதனம்.

தற்போது மொகம்மட் சம்சுதீன் என்பவர் தற்போது ஆதனத்தை நிந்தப்படுத்தி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு/இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகம்மட் சம்சுதீன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட், முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-585)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -08 கொழும்புத்துறை வீதியில் ஆதன இலக்கம் 236/20 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது சம்பந்தர் மாணிக்கவாசகரும் Dr.வெற்றிவேலும் என்ற பெயரிலே ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 29.08.2012 ஆம் திகதியிட்ட 694 இலக்க உறுதி மூலம் Dr.வெற்றிவேலு மகேஸ்வரன் நில.பரப்பு 02 குளி 5.5 விஸ்தீரணமான ஆதனம் நில.பரப்பு 4 குளி 3.4 நில.பரப்பு 5 குளி 12.7 மற்றும் நில.பரப்பு 2 குளி 13.6 விஸ்தீரணமான ஆதனங்கள் என்பவற்றை வைத்திலிங்கம் கிருபாகரனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

இவ்வுறுதியின் தாயுறுதி நொத்தாரிசு பி.காசிப்பிள்ளை முன்பாக 1934 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி 530 இலக்க உறுதி எனவும் அவ்வுறுதிமூலம் சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலும் பெண் பராசக்தியும் ஆகியவர்களுக்கு அறுதி மூலம் உரித்து வந்தடைந்தது என குறித்த 694 ஆம் இலக்க உறுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனங்களினை நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் முன்பாக 2016.05.04 திகதிய 2610 இலக்க உறுதி ஊடாக வைத்திலிங்கம் கிருபாகரன், யேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டன் உம் பெண் சுதர்சினிக்கு ஆகியோரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற நில.பர 1 விஸ்தீரணமான ஆதனத்தை ஜேசுதாசன் ஜோய்ஸ்நியூட்டன் உம் பெண் சுதர்சினியும் நொத்தாரிஸ் J.S.A.மதுரநாயகம் முன்பாக கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினிக்கு 2016.09.27 திகதியில் 2927 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி ஊடாக அறுதியாக விற்றுள்ளனர். பின்னர் ஆதன அட்டவணையில் ஏற்பட்டுள்ள தவறு 12.10.2020 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் முகதாவில் 6108 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட திருத்தல் உறுதி ஊடாக திருத்தப்பட்டுள்ளது.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவகர் பிரிவு J/62 ஆசைவளவும் பெரிய வளவும் திடலிற்புலமும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை 1-8 தண்டங்களால் பிரிவிட்டு வரைந்த 352 ஆம் இலக்கப்படத்தின் விஸ்தீரணம் நிலபரப்பு 35 குளி 3.7 இதில் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 35 குளி 3.7 இதில் குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 2 குளி 5.5 அதற்குரியவைகளும் இதில் ஏற்கனவே அறுதியாக விற்ற பகுதி போக மிகுதி வடக்குப்பக்கமாக நில.பரப்பு 1 இற்கு எல்லை.

கிழக்கு:- குறித்த படத்தில் துண்டு 7 எனச் சுட்டப்பட்ட பாதை நிலம்.
வடக்கு:- யோகராசா பெண் தர்சினி ஆதனம்.
மேற்கு:- வாய்க்கால்.
தெற்கு:- கிரிஷாந்தன் மயூர்தினியின் ஆதனம். இதுடங்கலும் இதற்குச்சேர்ந்தவைகளும்.

தற்போது கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினியும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினி உம் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்,**
**முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-586)

# வீதியோர வியாபாரங்களை தடை செய்ய வேண்டும்

## தவிசாளர்

(நெளுக்குளம்)

கொரோனா வைரஸ் தாக்கம் பரவலடைந்துவரும் நிலையில் வெளிமாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வவுனியாவில் வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தடைவிதிக்க வேண்டும் என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்துச் செல்கின்றது. வவுனியா மாவட்டத்திலும் வீதி திருத்தப்பணிகளில் ஈடுபட்டு வந்த சிலருக்கு வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுளீளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்து இங்கு வியாபார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தடைவிதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

வவுனியாவை பொறுத்தவரை வெளிமாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் இங்கு வருகைதந்து, வீதிக் கரைகளிலும், பொது இடங்களிலும் பல்வேறு வியாபார செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும், இந்த நடவடிக்கையில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வைரஸ் தாக்கம் இலகுவில் பரவலடைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் முன் எச்சரிக்கையான முறையில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இங்கு வந்து வியாபாரம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (5-299)

# வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

ஜனாதிபதியினால் மனைப் பொருளாதார போசணையினை மேம்படுத்தி குடும்ப அலகினை வலுவூட்டும் தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக சமுர்த்தி அலுவலகத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் 210 குடும்பங்களும் மரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா ஆச்சிபுரத்தில் இடம் பெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டின் கீழ் பிரதேச செயலாளர் கமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான கு.திலீபன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் து.நடராஜசிங்கம், வவுனியா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்களால் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. (5-4-299)

# 995 பி.சி.ஆர்.பரிசோதனைகள் 11 பேருக்கு தொற்று உறுதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நேற்று வரை 11 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மினுவாங்கொடை கொரோனா கொத்தணி ஆரம்பித்த பின்னர் மன்னார் பட்டித் தோட்டம் பகுதியிலும்,பேலியகொடை மீன் சந்தைத் தொகுதி கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இருவர் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய தினங்களில் அடையாளம் காணப்பட்டனர்.

அடையாளம் காணப்பட்ட 2 கொரோனா தொற்றாளர்கள் கொழும்பில் இருந்து மன்னாருக்கு வந்த போக்குவரத்து விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 11.20 மணியளவில் கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த ரத்னா ரவல்ஸ் என்ற தனியார் பேருந்தில் வருகை தந்து 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து தலைமன்னார் நோக்கி இலங்கை அரச பேருந்தில் பயணத்தை மேற்கொண்ட பயணிகள் மற்றும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்தான எச்.எஸ். ரவல்ஸ் ஊடாக பயணித்த மக்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பேருந்துகளில் பயணித்த மக்கள் உடனடியாக 071 847 4361 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தமது இருப்பிடத்தை தெரியப்படுத்திக் கொள்ளுமாறும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து நேற்று வரை 995 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11 நபர்கள் கொரோனா தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட 11 பேரில் 2 பேர் சிகிச்சையின் பின்னர் இரணவல வைத்தியசாலையில் இருந்து தமது வீடுகளக்கு சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-285)




# ஏற்றுமதி செய்ய முடியவில்லை தொழிலாளர் கவலை

(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் மீன் ஏற்றுமதி இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சுமார் 150 க்கும் மேற்பட்ட மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக மீன் ஏற்றுமதியின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இரணைமடு குளத்தில் பிடிக்கப்படுகின்ற மீனில் பெரும் பகுதி தென் பகுதிக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது.


இந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக மீன் ஏற்றுமதி முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதனால் தங்களுடைய தொழில் நடவடிக்கைகளை குறைந்த அளவிலேயே தற்போது மீனைப் பிடித்து உள்ளூர் வியாபாரிகளுக்கு வழங்கி வருவதாகவும் இரணைமடு நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (5-4-315)



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் பார்ராளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தானின் அலுவலகம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (படம்:- தவசீலன்)

# கலந்துரையாடல்



பிரதமர் அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவ தற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விசேட முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-281)

## இராசிபலன்

**28.10.2020**
**ஐப்பசி 12, புதன்கிழமை**
**துவாதசி பிற்பகல் 3.05 மணிவரை**
**பூரட்டாதி முற்பகல் 11.53 மணிவரை**
**சுபநேரம் 4.33 - 6.03 மணிவரை**
**இராகுகாலம் 12.03 - 1.33 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- ஆயில்யம், மகம்**
**பிரதோஷ விரதம்** **வளவன்**


மேஷம்

தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.


ரிஷபம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


மிதுனம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.


கடகம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வெறுத்து ஒதுக்கிய சிலரே விரும்பி வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


சிம்மம்

உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், பிரயாண பயமுண்டு.


கன்னி

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


துலாம்

தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சீராகும்.


விருச்சிகம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


தனுசு

சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், போசன நன்மையுண்டு.


கும்பம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், இல்லத்தில் இன்பங்கள் கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.


மீனம்

குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்கள் நட்பு கிடைக்கும், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள்.

**வீணாக உன்னையே நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கிக் கொள்ளாதே.**

# ஆசியாவை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர அமெரிக்கா முயற்சி

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**ஆசியப் பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே அமெரிக்க இராஜாங்க செயலாளரின் விஜயத்தின் நோக்கமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.**

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வாதிகாரம் மிக்க 20 ஆவது திருத்தம் ஒக்டோபர் 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

அது நிறைவேற்றப்பட்டு, அடுத்த நாளிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இதன்படி இந்த இரண்டிற்கும் இடையில் இரகசிய தொடர்பு உள்ளமை தெளிவாக தெரிகின்றது.





மைக் போம்பியோ இலங்கைக்கு வெறுமனே வரமாட்டார். ஆசிய பிராந்தியத்திற்குள் சுதந்திர வலயமொன்றை உருவாக்கும் நோக்கிலேயே வருகை தருகின்றார்.

அமெரிக்காவின் தேவைக்கு ஏற்ப ஆசியப் பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதே அவரது விஜயத்தின் நோக்கமாகும்.

இந்தியா, மாலைதீவு, இலங்கை மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு வருகை தந்து, பாதுகாப்பு மற்றும் பொருளாதார உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கே முயற்சி செய்கின்றார்கள்" எனக் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

## சுயதனிமை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் சுமார் 35 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி முதல் இன்று வரையில் சுமார் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் பேர் வரையில் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஜ-4)

## 5 ஆயிரத்தை நெருங்குகிறது



(கொழும்பு)

மினுவாங்கொட, பேலியகொட கொத்தணிகளில் மேலும் 261 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளானதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ள நிலையில், அங்கு கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 4 ஆயிரத்து 939 ஆக உயர்ந்துள்ளது.

குறித்த எண்ணிக்கையில் 27 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்தும் எஞ்சிய 234 பேர் மீனவச் சமுதாயங்களுடன் நெருங்கிய தொடர்புகளையுடையவர்கள் ஆவர். (ஜ-4)

## துப்பாக்கி மீட்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காந்திநகர் காட்டுப் பகுதியில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் கட்டுத் துப்பாக்கியை காந்திநகர் காட்டுக்குள் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வவுணதீவு பொலிஸார் மீட்டுள்ளனர். (ஜ-4)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

**03**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஒருவரின் வயது 17 ஆக இருக்கும் போது, அடுத்துவரும் பொதுத் தேர்தலில் அவரின் வயது 18ஐ அடையக்கூடியதாக இருந்தால், அவர் தன்னை வாக்காளராக முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ள முடியும். இது அவரை அடுத்த பொதுத் தேர்தலுக்கு அல்லது எந்தவொரு முதன்மை அல்லது சிறப்புத் தேர்தலிலும் வாக்களிக்க வழிவகுக்கும். இந் நடைமுறை அமெரிக்காவின் பல மாநிலங்களில் உள்ளது.

சில மாநிலங்களில் ஒருவர் 16 அல்லது 17 வயதாக இருக்கும் போது வாக்காளராக முன்பதிவு செய்ய முடியும். அவ்வாறு செய்தால் அவருக்கு 18 வயதாகும் போது தானாகவே (automatic) வாக்களிக்க பதிவு செய்யப்படுவார்.

> **சில மாநிலங்களில் ஒருவர் 16 அல்லது 17 வயதாக இருக்கும் போது வாக்காளராக முன் பதிவு செய்யமுடியும். அவ்வாறு செய்தால் அவருக்கு 18 வயதாகும் போது தானாகவே (automatic) வாக்களிக்க பதிவு செய்யப்படுவார்.**

வேறு சில மாநிலங்களில் முன் பதிவு செய்ய ஒருவருக்கு குறைந்த பட்சம் 17 வயதாக இருக்க வேண்டும். வேறு சில மாநிலங்களில் ஒருவரின் வயது பொதுத் தேர்தலின் போது 18 வயதை அடையுமாயின் அவர் அத் தேர்தலின் கட்சிகளின் முதன்நிலை வாக்கெடுப்பில் 17 வயதாக இருக்கும் போதே வாக்களிக்கலாம். வடக்கு டகோட்டா மாநிலத்தில் வாக்களிக்க ஒருவர் வாக்காளராக பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபாடுகள் உள்ளன.

> **அமெரிக்காவில் சட்டபூர்வ வாக்களிக்கும் வயது 18 ஆகும். வாக்காளர் பதிவு, பதிவுக்கு உரிய விதிகள் மற்றும் வாக்காளர் பதிவு வயது என்பன மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. பல மாநிலங்களில் ஒருவர் வாக்காளராகப் பதிவுசெய்யும்போது அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றும் பதிவில் குறிப்பிடவேண்டும்.**

பல மாநிலங்களில் (28 மாநிலங்கள் வரையில்) ஒருவர் வாக்காளராகப் பதிவுசெய்யும்போது அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பதிவில் குறிப்பிடவேண்டும். அரசு ஊழியர்களும் கட்சியில் இருக்கலாம், தடையில்லை. இதற்காக கட்சிக்கு சந்தா எதுவும் செலுத்த வேண்டியதில்லை. கட்சி வேட்பாளர் தேர்தலில் (முதன்நிலை வாக்கெடுப்பு) கலந்து கொள்ளவே இக்கேள்வி கேட்கப்படுகிறது.

எக்கட்சியையும் சாராதவர் என்றால் 'சுயேச்சை' என்றும் பதிந்து கொள்ளலாம். சில மாகாணங்களில் சுயேச்சை என்று பதிந்துகொண்டால், எந்தவொரு கட்சியினதும் வேட்பாளர் தெரிவு (முதன்நிலை வாக்கெடுப்பு) தேர்தலில் வாக்களிக்க இயலாது. ஆனால் அரிசோனாவில், சுயேச்சைகள் வேட்பாளர் தெரிவுத் (முதன்நிலை வாக்கெடுப்பு) தேர்தலில் எக்கட்சியினதும் வேட்பாளருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம்.

ஆனால், ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்று பதிந்தால் அக்கட்சி வேட்பாளர்களுக்கு மட்டுமே வாக்களிக்க அனுமதி உண்டு. இதைப் பாதி-திறந்த, அல்லது பாதி-மூடிய கட்சியின் முதன் நிலை வாக்கெடுப்பு தேர்தல் (semi-open or semi-closed primary) என்கிறார்கள்.

அமெரிக்காவில் இருபத்து இரண்டு மாநிலங்களில் வாக்காளராகப் பதிவு செய்யும்போது கட்சிசார்பு பற்றிக் கேட்பது இல்லை. இந்த மாகாணங்களில் கட்சியின் திறந்த முதன்நிலை வாக்கெடுப்பு தேர்தலே (open primary) நடைபெறுகிறது. இது அந்தந்த மாநில உரிமையாகும். இவை மாற்றப்படவும் முடியும். இந்த விடயத்தில் ஒவ்வொரு மாநிலமும் தன்னுரிமை பெற்றிருக்கிறது.

2012 ஆம் ஆண்டின் ஒரு ஆய்வின் படி, அமெரிக்காவில் வாக்களிக்கும் தகுதி வாய்ந்த மக்களில் 24சதவீதம் பேர் வாக்களிக்க பதிவு செய்யப்படவில்லை.

இது சுமார் 51 மில்லியன் அமெரிக்க குடி மக்களுக்குச் சமம். இதனால் வாக்காளராக பதிவுசெய்தல் முறை மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளது.

### எப்போது வாக்காளர் பதிவு நடைபெறுகிறது?

இதுவும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. பெரும்பான்மையான மாநிலங்களில் வாக்காளர்கள் உத்தியோகபூர்வ தேர்தல் நாளுக்கு இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு முன் வாக்காளராக பதிவு செய்ய வேண்டும். பொதுவாக வெட்டு திகதிகள் (cut off dates) 30 முதல் 15 நாட்கள் வரை மாறுபடும் வகையில் உள்ளன.

சில மாநிலங்கள் தேர்தல் நாள் அன்று வாக்காளர் பதிவை அனுமதிக்கின்றன. (இது EDR என்றும் அழைக்கப்படுகிறது). வாக்காளர்கள் உத்தியோகபூர்வ தேர்தல் நாள் அன்றே தம்மைப் பதிவு செய்வதோடு வாக்களிக்கவும் முடியும். இது தகுதியான குடிமக்கள் வாக்களிக்க பதிவு செய்ய அல்லது தனது பதிவை புதுப்பிக்க உதவுகிறது. சில மாநிலங்கள் இந்த நடைமுறையை ஒரே நாள் பதிவு (S.D.R) என்று அழைக்கின்றன.

ஏனெனில் உத்தியோகபூர்வ தேர்தல் நாளுக்கு முன்னரே ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு காலத்தில் வாக்களிப்பு செய்பவர்கள் அன்றைய தினமே அவர்கள் தம்மை வாக்காளராக பதிவு செய்து வாக்களிக்க முடியும். அமெரிக்காவின் 21 மாநிலங்களும், வோசிங்டன் டி.சியும் (கொலம்பியா மாவட்டமும்) ஒரே நாளில் வாக்காளர் பதிவை வழங்குவதோடு அந்த நாளில் வாக்குச்சீட்டைப் பதிவு செய்ய (வாக்களிக்க) அனுமதிக்கின்றன.

இந் நடைமுறையைக் (SDR & EDR) கொண்டுள்ள மாநிலங்களில் வாக்களிப்பு 71 சதவீதமாக இருக்கும் போது இம்முறையைப் பின்பற்றாத மாநிலங்களில் வாக்களிப்பு 59சதவீதமாக இருப்பதாக காணப்பட்டுள்ளது.

> **சில மாநிலங்கள் உத்தியோகபூர்வ தேர்தல் நாள் அன்று வாக்காளர் பதிவை மேற்கொள்ள அனுமதிக்கின்றன. இது EDR என்றும் அழைக்கப்படுகிறது. வாக்காளர்கள் உத்தியோகபூர்வ தேர்தல் நாள் அன்றே தம்மைப் பதிவு செய்வதோடு வாக்களிக்கவும் முடியும்.**

ஒருவர் வாக்காளர் பதிவை எவ்வாறு புதுப்பிப்பது என்பது உட்பட ஒவ்வொரு மாநிலமும் அதன் சொந்த வாக்களிப்பு விதிகளை உருவாக்கியுள்ளன. பெயர் மாற்றம், விலாசம் மாற்றம், அரசியல் கட்சி இணைப்பை மாற்ற விரும்புதல் (ஒரு கட்சியிலிருந்து மற்றைய கட்சிக்கு மாறுவது) போன்ற காரணங்களுக்காக ஒருவர் வாக்காளர் பதிவை புதுப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். தேர்தல் நாளில் வாக்களிக்கும் ஒருவர் தனது வாக்காளர் பதிவு அட்டையை அவருடன் கொண்டு செல்லவேண்டிய தேவையில்லை. ஆனால், சில மாநிலங்களுக்கு வாக்களிக்க புகைப்பட அடையாள அட்டை தேவைப்படுவதால் ஒருவருக்கு வேறு அடையாளம் தேவைப்படலாம்.

ஒருவர் வாக்களிக்க பதிவு செய்யும் போது, அவருக்கு வாக்காளர் பதிவு அட்டை அனுப்பப்படும். அவர் வாக்களிக்க பதிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் அவரது வாக்காளர் தகவல் சரியானது என்பதும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

ஒருவரது வாக்காளர் பதிவு அட்டையில் பொதுவாக அவரது பெயர், வீட்டு முகவரி மற்றும் அவர் வாக்களிக்கும் வாக்குச் சாவடியின் முகவரி ஆகியவை அடங்கும்.

புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அல்லது மாநில அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் எவருக்கும் வாக்காளர் பதிவு வாய்ப்புகளை வழங்க மாநில மோட்டார் வாகன அலுவலகங்கள் உள்ளன.

### தானியங்கி வாக்காளர் பதிவு (automatic voter registration )

1993 ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் பதிவு சட்டத்தின் பிரகாரம் "மோட்டார் வாக்காளர்" என்றும் அழைக்கப்படும் அந்தச் சட்டம் அமெரிக்காவில் வாக்களிக்க பதிவு செய்வதற்கான ஒரு புதிய வழியை முன்னெடுத்தது. வாகனம் ஓட்டும் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும்போது வாக்காளர் பதிவைச் செய்ய குடிமக்களுக்கு பெரும்பாலான மாநிலங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்த செயல்முறை மோட்டார் வாகனம் ஓட்டும் உரிமம் பெறும் நிறுவனத்தில் தொடங்குகிறது. ஓட்டுநர் உரிமம், அனுமதி அல்லது அடையாள அட்டைக்கு குடிமக்கள் விண்ணப்பிக்கும்போது, புதுப்பிக்க அல்லது மாற்றும்போது, பெயர், முகவரி, பிறந்த திகதி மற்றும் மின்னணு கையொப்பம் உள்ளிட்ட அவற்றின் தொடர்புடைய தகவல்கள் மின்னணு முறையில் மாநில தேர்தல் நிறுவனத்துடன் பகிரப்படுகின்றன.

மாநில தேர்தல் நிறுவனம் பின்னர் தகுதியை (குடியுரிமை, வயது மற்றும் வதிவிடத்தை) சரிபார்க்கிறது, ஏற்கனவே மாநிலம் தழுவிய வாக்காளர் பதிவு தரவுத்தளத்தில் உள்ளவற்றோடு தகவல்களை ஒப்பிடுகிறது, ஏற்கனவே பதிவு இல்லை என்றால், அந்த நபரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கிறது.

கடைசியாக, தேர்தல் நிறுவனம் வாக்காளருக்கு பதிவு அறிவிப்பு அட்டையை அனுப்புகிறது. இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மூன்று விடயங்களில் ஒன்றைச் செய்ய வாக்காளரை அனுமதிக்கிறது:

❖ கட்சி இணைப்பைத் தேர்ந்தெடுத்து (அதாவது எந்த அரசியல் கட்சியுடன் இணைந்துள்ளார்) , பூர்த்தி செய்யப்பட்ட அட்டையை திருப்பி அனுப்புதல்.

❖ வாக்காளர் பதிவு தரவுத்தளத்தில் பதிவு செய்ய மறுக்கும் விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து அஞ்சலட்டை மீண்டும் அஞ்சல் செய்தல்.

❖ எந்த நடவடிக்கையும் எடுக்காததால் இணைக்கப்படாத வாக்காளராக பதிவு செய்தல் போன்றவையாகும்.

(தொடரும்...)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சுரம் அல்லது காய்ச்சலும் நிலவேம்பு இன மூலிகைகளும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்




காட்டு நிலவேம்பு

எல்லா இன நிலவேம்பு மூலிகைகளும் மிகவும் கசப்பானவை, செடி இனத்தைச் சார்ந்தவை. ஆனால் வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்த மூலிகைகள். சித்த மருத்துவம், ஆயுள்வேத மருத்துவத்தில் இலங்கையில் நிலவேம்பு இன மூலிகைகள் பயன்பாட்டிலுள்ளன. மிகவும் கசப்பான இவ் மூலிகை சுரம்/காய்ச்சலை தணிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக சுரம் அல்லது காய்ச்சலுக்கு காரணம் சமிபாடையாத ஆமம் அமர்வாசம் அல்லது இரைப்பையில் சேர்வதாகும். கைப்புச் சுவையான நிலவேம்பில் இருக்கும் வாயு, ஆகாய பஞ்சபூதங்கள் இவ் ஆமத்தை உடைத்து அகற்றும் தன்மை வாய்ந்தவை.

நிலவேம்பு இன மூலிகைகள்.

நான்கு வகையான மூலிகைகளும் பொதுவாக நிலவேம்பு என அழைக்கப்படுகிறது.

தூய நிலவேம்பு
Botanical Name- Munronia Pinnata
Family - Meliaceae

நாட்டு நில வேம்பு
Botanical Name- Andrographis paniculata
Family - Acanthaceae

காட்டு நிலவேம்பு
Botanical Name- Peristrophe bicalyalata
Famil - Acanthaceae

சிரட்டைக்குச்சி/சூரத்து நிலவேம்பு
Botanical Name- Surertia chirata
Family -Gentionaceae

பொதுவாக எல்லா வகை நிலவேம்புகளும் செய்கை குணம் ஒன்றேயாகும்.

நிலவேம்பினால் எல்லா வகைச் சுரங்களும், வளிச் சுரம், நீர்க்கோவை, மயக்கம் நீங்கி புத்திக்கு தெளிவு உண்டாகும்.

வாதசுரம் நீரேற்றம் மாற்றுஞ் சுரதோடே
காதமென ஓடக் கடியுங் காண் - மாதரசே
பித்த மயக்கறுக்கும் பின்பு தெளி வைக்கொடுக்கும்
சுத்த நில வேம்பின் தொழில்

மேற்கூறிய நிலைமைகட்கு நிலவேம்பு 15 கிராம் கிச்சிலித்தோல் 195 மி.கிராம் இவைகளை வெந்நீரில் சேர்த்து மூடி ஒரு மணி நேரம் சென்ற பின்பு வடிகட்டி 15-30 மில்லி வீதம் தினம் 2-3 முறை கொடுக்கலாம்.

தூய நிலவேம்பானது சிறிய வைரமான செடி வகையைச் சேர்ந்தது. கிளைகளற்ற 5-15 செ.மீ நீளமான தண்டுகளைக் கொண்டது.

வெண்ணிறமான பட்டையும் நீள் வைரமான (Woody roots) வேர்களும் இதில் காணப்படும்.

இலைக்காம்பு 1-4.5 செ.மீ நீளமான ஒவ்வொரு இலையமைப்பிலும் 1-3 சோடி சிற்றிலைகள் (Leaf Lets) காணப்படும்.

சில இலைகளில் 1-5 சிற்றிலைகள் காணப்படும்.

ஒழுங்கான, இருபாலான வெள்ளை நிறப் பூக்களைக் கொண்டது. சிறிய 5 சோனைகளான பழங்கள் காணப்படும். அழுத்தமான, மண்ணிறமான, ஒடுங்கிய இறக்கை வடிவ விதைகள் காணப்படும். பூக்களை சித்திரை, ஆடி மற்றும் ஆவணி மாதங்களில் காணலாம்.

இதன் பரம்பலானது தென்னிலங்கையிலும் மலைநாடுகளிலும் ஓரளவு காணப்படும் காய்ச்சலுக்கு பயன்படும் குடிநீர்கள், சூரணங்கள் மற்றும் பல மருந்துகளில் இவ்வேருடன் கூடிய நிலவேம்பு பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையில் ஆயுள்வேத தென்பகுதி மருத்துவத்தில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

சூரத்து நிலவேம்பு வடபகுதி சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. இது இந்தியாவில் வடபகுதி மலைப் பிரதேசங்களில் பரம்பிக்காணப்படும் சிரட்டைக்குச்சி எனும் சூரத்து நிலவேம்பிற்கு பதிலாகவும் (Substitute) பயன்படுத்தப்படுகிறது. இத்தூய நிலவேம்பிற்கு காய்ச்சலை நீக்கும் தன்மையும் இரத்தத்தை சுத்திகரிக்கும் செய்கையும் உண்டு.

காட்டு நிலவேம்பானது வடபகுதி சித்தமருத்துவர்களால் பயன்படுத்தப்படுகிறது. 60 தொடக்கம் 180 செ.மீ.வரை நிமிர்ந்து வளரக்கூடிய செடி இனத்தைச் சேர்ந்தது. இதன் தண்டானது நாற்சதுரவடிவானதும் கரும்பச்சை நிறமானதுமாகும்.

இலைகள் எதிரிலை அடுக்கம் கொண்டவை. கோள வடிவான (Ovate) நீண்ட இலைக்காம்புகளைக் கொண்டது. வெண்ணிற அல்லது றோஸ் நிறப்பூக்களினுள் ஊதா நிறவரிகள் காணப்படும். வட்டவடிவ விதைகளைக் கொண்டவை.

இதன் பரம்பலானது உலர்ந்த கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் அதிகம் காணப்படும். பெரிய மரங்களின் கீழ் வளரக்கூடியது. இதன் வேருடன் கூடிய முழுச் செடியும் மிகவும் கசப்பானது. இக்காட்டு நிலவேம்பு தான் வடபகுதி பரம்பரை அரசாங்க, சித்த வைத்தியசாலைகளில் பெரும்பாலும் காய்ச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

நாட்டு நிலவேம்பானது கிழக்கு பகுதி சித்த மருத்துவர்களால் பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. ஓராண்டு வளரக்கூடிய 30-60 செ.மீ. உயரமுள்ள செடியாகும். இலைகள் தனியிலை எதிரிலை அடுக்கம் கொண்டவை. 3.7 தொடக்கம் 10 செ.மீ.நீளமும் 0.9 தொடக்கம் 2.7 செ.மீ.அகலமுடைய வேலுருவான இரு முனைகளும் ஒருங்கிய இலைகளைக் கொண்டது. இலைகளின் மேற்பக்கம் கரும்பச்சை நிறமும் கீழ்ப் பக்கம் வெளிர்நிறமுடையது. இருபாலான ஒழுங்கற்ற பூக்கள் பூவிதழ்கள் ஐந்தும் இணைந்தும் மேற் பக்கம் இரண்டு பிளவுபட்ட உதட்டையும் கொண்டது. அத்துடன் வெள்ளை நிறப் பூக்களின் நடுவில் சிவப்பு கலந்த ஊதாக் கோடுகள் காணப்படும். மண்ணிறமான பழங்கள் ஒரு பழத்தில் 6 மண்ணிற விதைகள் காணப்படும்.

இதனை இலங்கையில் பயிரிட்டும் வளர்க்கலாம். இது ஓர் காயகற்ப மூலிகையுமாகும். வடபகுதியிலும் பயிரிடக்கூடிய மண்வளத்தை கொண்டுள்ளது. விதைகள் மூலமும் நாற்றுக்கள் நட்டும் இனவிருத்தி செய்யலாம். 120 நாட்களில் அறுவடை செய்யலாம். பெரிய வேருடன் கூடிய முழுச் செடியும் மிகவும் கசப்பானது.

குளிருடன் கூடிய காய்ச்சலுக்கு நிலவேம்பு 34 கிராம், வெந்நீர் 700 மில்லி கறுவாப்பட்டைத் தூள் அல்லது ஏலத்தூள் 4 கிராம் எடுத்து ஒன்று சேர்த்து 6 மணி நேரம் ஊறவைத்து வடித்து 30-60 மில்லி தினமும் 3 வேளை அருந்த காய்ச்சல் குணமாகும்.


பொதுவாக நாட்டு நிலவேம்பானது காயகல்ப மூலிகையாகவும் இருப்பதால் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள தொற்றுக் காய்ச்சலுக்கு சுரத்தை தணிக்கவும் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிப்பதற்காக நாட்டு நிலவேம்பு சேர்ந்த குடிநீரை பயன்படுத்தலாம்.

இதற்கு நிலவேம்பு, ஆடாதோடை, பேய்ப்புடோல், சீந்தில், பற்படாகம், கண்டங் கத்தரி வேர், சுக்கு, சிறுகாஞ்சொரி வேர், கோரை ஒவ்வொன்றும் சம எடை எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக காய்ச்சி 60 மில்லி அளவு தினமும் எடுத்து வர நோய்த்தடுப்பு குடிநீராக பயன்படும். இதில் நில வேம்பு, கோரை, சீந்தில் என்பன கற்ப மூலிகையாகவும் அமைந்து விடுவதால் நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கச் செய்யும் என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

வீட்டுத்தோட்டத்தில் நாட்டு நிலவேம்பை நட்டுப் பயிரிடலாம். ஆனால் விதைகளை 24 மணிநேரம் நீரில்ஊறப்போட்ட பின்பே விதைக்க வேண்டும்.



நாட்டு நிலவேம்பு



தூய நிலவேம்பு



சூரத்து நிலவேம்பு

தற்கால தொற்றுக்களுக்கு தடுப்பு முறையாக நாட்டு நிலவேம்பிற்கு பதில் காட்டு நிலவேம்பும் பயன்படுத்தலாம். வட மாகாணத்தில் இரண்டு நிலவேம்புகளின் பரம்பலும் அதிகம் காணப்படுகிறது.

வீட்டில் சாதாரணமாக மேற்படி தொற்றுக்கள் பரவும் சமயம் தடுப்பு முறையாக,

நாட்டுநிலவேம்பு/காட்டுநிலவேம்பு
நெல்லிவற்றல்
வெள்ளறுகு
மரமஞ்சள்
சுக்கு/வேர்க்கொம்பு
கருந்துளசி

இவைகள் ஒவ்வொன்றும் சம எடை எடுத்து 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக வற்றக்காய்ச்சி 60 மில்லி அளவு தினமும் எடுத்துவர வேண்டும். தொடர்ந்து 48 நாட்கள் பயன்படுத்தலாம். நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கும்.

# பாரதம்

# பாகிஸ்தான் பாடசாலையில் குண்டுவெடிப்பு சிறுவர்கள் உட்பட 7 பேர் பலி, 70 பேர் படுகாயம்

(லாகூர்)

**பாகிஸ்தானில் மத பாடசாலையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்ததுடன் 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**



பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துவா மாகாணம் பெஷாவர் நகரில் உள்ள டிர் காலனியில் ஸ்பன் ஜமாத் என்ற மசூதி உள்ளது. இந்த மசூதியின் ஒரு பகுதியில் மத கருத்துக்களை கற்றுகொடுக்கும் மத பாடசாலை செயற்பட்டு வந்தது. அந்த பள்ளியில் டிர் காலனி பகுதியை சேர்ந்த சிறுவர்கள் மத கல்வி கற்று வந்தனர்.

இந்நிலையில், அந்த மதபாடசாலையில் நேற்றுக் காலை வழக்கம்போல 80 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மதகல்வி பயின்று வந்தனர். காலை 8.30 மணியளவில் மதகல்வி கற்றுக் கொடுத்து வந்த மசூதியின் மையப்பகுதியில் திடீரென சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த சிறுவர்கள் மசூதி கட்டடத்தை விட்டு வெளியே தப்பியோடினர். ஆனாலும், இந்த பயங்கர குண்டு வெடிப்பு சம்பவத்தில் சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 70 இற்கும் அதிகமான சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். மேலும், இந்த குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)




# கொவிட் - 19 கட்டுப்பாடுகளை எதிர்த்து இத்தாலியில் போராட்டம்

(ரோம்)

இத்தாலியில் கொவிட்-19 கொரோனா வைரஸ் இரண்டாவது அலையை தடுப்பதற்கான புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. டுரின் உட்பட பல முக்கிய நகரங்களில் மோதல்கள் பதிவாகியுள்ளன. பொலிஸ் அதிகாரிகள் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

எதிர்ப்பாளர்களை கலைக்க மிலன் நகரில் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டுள்ளது, அதே நேரத்தில் நேபிள்ஸிலும் வன்முறை பதிவாகியுள்ளது.

உணவகங்கள், மதுபானசாலைகள், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சினிமா திரையரங்குகள் ஆகியவற்றை மூடுவதற்கு அரசாங்கத்தின் உத்தரவு நடைமுறைக்கு வந்தவுடன் இந்த போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

மிலன் இருக்கும் லோம்பார்டி பிராந்தியம் மற்றும் டுரின் இருக்கும் பீட்மாண்ட் பிராந்தியம் உள்ளிட்ட பல பிராந்தியங்களில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ரோம், பலேர்மோ உள்ளிட்ட சுமார் பல நகரங்களிலும் எதிர்ப்புக்கள் வெடித்துள்ளன.

இவ்வருடம் ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க நாடளாவிய ரீயிலான ஊரடங்கிற்கு மக்கள் கட்டுப்பட்டு இருந்தாலும் புதிய கட்டுப்பாடுகளின் அறிவிப்பு மக்களிடம் உடனடி அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. முதலில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கில் பாதிக்கப்பட்ட சிறு வணிகங்கள் மீண்டு வருவதாகவும், புதிய கட்டுப்பாடுகள் அதனை முடக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

போராட்டகாரர்கள் பட்டாசுகளை கொளுத்தி விட்டு நகரத்தில் வண்ணத் தீப்பொறிகளை எரித்துள்ளனர். அதேநேரத்தில் கலவரங்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மிலனில், மக்கள் "சுதந்திரம், சுதந்திரம், சுதந்திரம்" என கூச்சலிட்டு நகர மையத்தில் பொலிஸாருடன் மோதிக் கொண்டுள்ளனர். இந்த நகரம் லோம்பார்ட் பிராந்தியத்தின் தலைநகராகும், இது குறிப்பாக வைரஸால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரண்மனையில் தூய்மைப் பணி 20ஆயிரம் பவுண்ஸ் ஊதியம்

(லண்டன்)

பிரித்தானிய இளவரசி எலிசபெத்தின் வின்ட்ஸ்டர் காஸ்டில் அரண்மனையில் தூய்மை பணியாளருக்கு ஏறக்குறைய 20,000 பவுண்டுகள் ஊதியமாக வழங்கப்படுகின்றது.

இளவரசி எலிசபெத்தின் அரண்மனையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வது, பராமரிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள ஆட்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. இதன் அதிகாரபூர்வ அறிவிப்பு அரச இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

இதற்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு 13 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, பிறகு முழு நேரப் பணியாளர்களாக பணியமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பணிக்குத் தேர்வானோர் வின்ட்சர் காஸ்டில் அரண் மனை மட்டுமல்லாமல் பக்கிங்காம் அரண்மனை உள்ளிட்ட பல்வேறு அரண்மனைகளிலும் பணியமர்த்தப்படுவார்கள். அதாவது ஆண்டில் தலா 3 மாதங்கள் ஒவ்வொரு அரண்மனையிலும் பணியாற்றும் வகையில் அவர்களது பணிக்காலம் அமையும்.

இது ஒரு நிரந்தர பணி வாய்ப்பாகும். ஆங்கிலம் மற்றும் கணிதம் நன்கு தெரிந்தவர்கள் இந்த வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

ஒரு வேளை, இந்தக் கல்வித் தகுதி இல்லாமல், ஆனால் நேர்முகத் தேர்வின் போது நன்கு பணியாற்றக் கூடியவராக அறியப்பட்டால், அவர்களுக்கு 13 கால பயிற்சியின் போது கல்விப் பயிற்சி அளித்து தேர்வு செய்யப்படும் வாய்ப்பும் உள்ளது.

இந்த பணியில் சேர்ந்தவர்கள் அரண்மனையில் வசிப்பதோடு, ஆண்டுக்கு 33 நாட்கள் விடுமுறை, ஓய்வூதியம், உணவுப்படி, போக்குவரத்துப் படி அனைத்தையும் பெறலாம். ஊழியர்களுக்கு என்று தனியாக உடற்பயிற்சி கூடம், நீச்சல் குளம், டென்னிஸ் மைதானமும் இருக்கிறதாம்.

அது மட்டுமல்ல, வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே பணி நாள். இதற்கு அவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் 19,140 பவுண்டுகள் (34,000 டொலர்கள்) இது வெறும் தொடக்க ஊதியம்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆப்கானில் குண்டு

❖17 பயங்கர

❖ஆயுதக் கிட

(காபூல்)


தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகள் மீது போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 17 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக நீடிக்கும் உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே கட்டார் தலைநகர் டோஹாவில் அமைதி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

# வெளிநாடு

## பொது நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்தால் கொரோனா பரவல் குறையும்

### இங்கிலாந்து ஆராய்ச்சியில் தகவல்



**(லண்டன்)**

**பொது நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்தால், கொரோனா பரவல் விகிதம் ஒரு மாதத்துக்குள் 24 சதவீதம் குறையும் என்று இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.**

இங்கிலாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தினர்.

கடந்த ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜூலை 20 ஆம் திகதி வரை 131 நாடுகளில் அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளையும், அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் அடிப்படையாக வைத்து இந்த மாதிரி ஆய்வை நடத்தினர்.

இந்த ஆய்வு முடிவுகளை ஒரு பத்திரிகையில் வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து எடின்பர்க் பல்கலைக்கழக பேராசிரியர் ஹரிஷ் நாயர் கூறியதாவது.

கொரோனா பரவலை குறைக்க தனிப்பட்ட நடவடிக்கைகளாக பள்ளிகள், பணியிடங்களை மூடுதல், பொது நிகழ்ச்சிகளை தடை செய்தல், 10 நபர்களுக்கு மேல் கூடுவதற்கு தடை விதித்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளால், 28 நாட்களில் கொரோனா பரவல் விகிதம் 24 சதவீதம் குறையும்.

சில நாடுகளில் கொரோனா 2 ஆவது அலை பரவல் நடப்பதை பார்த்துள்ளோம். அதை தவிர்க்க ஒன்றுக்கும் மேற்பட்ட நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் அமுல்படுத்த வேண்டும். இதற்கு நல்ல பலன்கள் ஏற்படுவதை பார்த்துள்ளோம்.

பள்ளிகளை திறந்ததால், சில நாடுகளில் கொரோனா பரவல் அதிகரித்ததை கவனித்துள்ளோம். எனவே, பள்ளிகளைத் திறக்கும்போது, கை கழுவுதல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல், முகக்கவசம் அணிதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (நி)

## அறிகுறியே இல்லாமல் சீனாவில் தொற்று; 3 நாட்களில் 47 இலட்சம் பேருக்கு பரிசோதனை

(பீஜிங்)

சீன நகரில் அறிகுறியே இல்லாமல் பலருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, அந்த நகரின் ஒட்டுமொத்த மக்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யும் பணியில் அரசு இறங்கியுள்ளது.

சீன நகரம் ஒன்றில் அறிகுறியே இல்லாமல் பலருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, அந்த நகரின் ஒட்டுமொத்த மக்கள் தொகையான 47 இலட்சம் பேருக்கும் 3 நாட்களுக்குள் கொரோனா பரிசோதனை செய்யும் பணியில் அரசு இறங்கியுள்ளது.

ஒட்டுமொத்த உலகையும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் உயிர் கொல்லி கொரோனா வைரஸ் சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தோன்றியது.

அதன்பின்னர் இந்த வைரஸ் நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் கடந்து தற்போது ஒட்டுமொத்த உலகத்திலும் பரவிகிடக்கிறது.

வலுவான சுகாதார கட்டமைப்பைக் கொண்ட நாடுகளும் கூட கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி தவித்து வரும் சூழலில், கொரோனாவின் பிறப்பிடமான சீனா அதன் பாதிப்பில் இருந்து பெருமளவு மீண்டது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில் சீனா மிகப் பெரிய வெற்றியை கண்டிருந்தாலும், அங்கு கொரோனா பாதிப்பு முழுமையாக நீங்கிவிடவில்லை.

இந்த நிலையில் சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஜின்ஜியாங் மாகாணம் காஷ்கர் நகரில் ஆடைத் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் இளம் பெண் ஒருவருக்கு கடந்த சனிக்கிழமை அறிகுறிகளே இல்லாமல் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்த இளம் பெண்ணுடன் தொடர்பில் இருந்தவர்களை பரிசோதனை செய்ததில் 137 பேருக்கு எந்த அறிகுறியும் இல்லாமல் கொரோனாத் இருப்பது கண்டறியப்பட்டது.

இது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதை தொடர்ந்து காஷ்கர் நகரின் மொத்த மக்கள் தொகையான 47 இலட்சம் பேருக்கும் 3 நாட்களில் கொரோனா பரிசோதனை செய்ய மாகாண அரசு முடிவு செய்தது. இதற்காக நகரம் முழுவதும் பல்வேறு இடங்களில் கொரோனா பரிசோதனை மையங்கள் திறக்கப்பட்டு இரவு-பகலாக பரிசோதனை நடந்து வருகிறது. (நி-7)

## ... மழை பொழிந்த விமானங்கள்

## ...வாதிகள் பலி

## ...ங்குகள் நிர்மூலம்


இந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இதுவரை ஏற்படாத நிலையில் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. இராணுவ வீரர்களையும் பொலிஸாரையும் குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதற்குப் பதிலடியாக இராணுவமும் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் உள்ள வார்டாக் மாகாணத்தின் சயீத் அபாத் மாவட்டத்தில் இராணுவம் அதிரடி வான் தாக்குதலை நடத்தியது.

தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகள் மீது போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. இதில் தலிபான் பயங்கரவாதிகள் 17 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதேவேளை, பல பயங்கரவாதிகள் படுகாயமடைந்தனர். அதுமட்டுமின்றி பயங்கரவாதிகளின் ஆயுத கிடங்குகள் மற்றும் பதுங்கு குழிகள் உள்ளிட்டவை நிர்மூலமாக்கப்பட்டன. (நி)

## கொரோனா இரண்டாம் அலை ஸ்பெயினில் தேசிய அவசரநிலை பிரகடனம்



(மாட்ரிட்)

ஸ்பெயினில் கொரோனா நோய்த்தொற்று பரவலை குறைக்க அந்நாட்டு அரசு அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது.

ஸ்பெயின் நாட்டில் கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை அதிகரிக்க தொடங்கியிருக்கிறது. நாட்டில் இதுவரை 11 இலட்சத்து 10 ஆயிரத்து 372 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 35 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், ஸ்பெயினில் கொரோனா பரவலை குறைக்க அந்நாட்டு அரசு தேசிய அவசரநிலை உத்தரவை பிறப்பித்துள்ளது. அதன்படி, மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து இரத்து செய்யப்படும். கனாரி தீவை தவிர இந்த அவசரநிலை மற்ற அனைத்து இடங்களுக்கும் பொருந்தும்.

இரவு நேரங்களில் முழு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் பெட்ரோ சன்செஸ் தெரிவித்துள்ளார்.

நாம் கடந்து வரும் நிலைமை தீவிரமானது என்றும், இந்த புதிய அவசரகால நிலை மே மாத தொடக்கம் வரை நீடிக்கும் என்றும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார். (நி)

# பாதுகாப்புத்துறை முற்றாக மாற்றியமைக்கப்படும்-பீரிஸ்



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைத்த பின் நாட்டின் பாதுகாப்புத் துறையை முற்றாக மாற்றியமைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலை மையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவில் முன்வைக்கப்படும் சாட்சியங்களுக்கு அமைய நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக மக்களுக்குள் பெரிய பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள், நிதி வழங்கியவர்கள், ஆதரவளித்தவர்களை கண்டறிந்து அவர்களை சட்டத்திற்கு முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப் படும்.

அத்துடன் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள்நடக்காமல் இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சுகாதார சேவைப் பணிப்பாளராக அசேல குணவர்தன நியமனம்



(கொழும்பு)

புதிய சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் அசேல குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, உடன் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியர் அசேல குணவர்தன,களுபோவில் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கு முன்னர் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகமாக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# வாகன வருமான அனுமதிப்பத்திரங்கள் காலத்தை நீடிக்க நடவடிக்கை



(கொழும்பு)

இணையத்தளம் மூலமாக வழங்கப்படும் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை மட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இணையத்தளம் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 30 நாட்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மத்திய மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்படவுள்ளன. மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளர் பாரமி தென்னகோன் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்று முதல் ஒருமாத காலப் பகுதிக்கு மத்திய மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அச்ச நிலைமை காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த காலப்பகுதிக்காக தண்டப்பணம்அறவிடாது இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன். இது குறித்து உரிய பொலிஸ் நிலையங்களை அறிவுறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும்- உயர்வதற்கு வழிகள். அதைவிட்டுவிட்டு உட்கார்ந்த இடத்திலே இருந்து கொண்டே உயரப்போக வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டிருக்கக் கூடாது.

இரண்டாவது செய்யும் தொழிலே தெய்வம். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அந்தத் தொழிலுக்குரிய பெருமையை நாம் புரிந்து கொண்டு அதிலே ஈடுபட வேண்டும். அதை விட்டுவிட்டு என்ன சேர் பிழைப்பு இது... இந்தத் தொழிலை மனிதன் செய்வானா? அப்படி என்று சொல்லிக் கொண்டு அந்த தொழிலையே தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றவர்கள் எங்களிலே பலபேர் உண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருத்தரை சந்தித்தேன். திரைப்படத் துறை கலைஞர் அவர். நடிகர் கே.கே.சௌந்தர். அவர் ஒரு கதை சொன்னார். இப்பொழுது நாம் பேசிக்கொண்டிருந்தோம். இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாகத் தெரிந்தது.

அதாவது ஒரு பெரிய மலைப் பகுதி. அந்த மலை அடிவாரத்திலே ஒரு சிற்பி உட்கார்ந்து கொண்டு சிலை வடித்துக் கொண்டிருந்தான். கையிலே ஒரு சின்ன ஒளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டு இருந்தான்.

சிற்பம் செய்வது எப்பேர்ப்பட்ட தொழில். எல்லோராலும் முடியுமா அது?

அப்படி இருந்தும் அந்த சிற்பிக்கு மன நிறைவு இல்லை. வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. சிற்பியா வெயிலை எங்கள் மேலே வீசுகின்றான். நாங்களே அந்த சூரியனாக இருந்துவிட்டால் இந்த கஷ்டம் இருக்காதே.

எங்களில் கஷ்டப்படுகின்றவன் எங்களை விட வலிமை உள்ளவன். அதனால் நாம் அவனாக மாறிவிடுவது தான் நல்லது என்று நினைத்தான். உடனே அவன் எண்ணம் நிறைவேறிவிட்டது.

இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றி விட்டது. சிற்பி சூரியனாக மாறிவிட்டான். இனிமேல் இந்த உலகத்திலே என்னை விட வலிமை உள்ளவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். சந்தோசமாக இருந்தான். இந்த நேரத்திலே மேகங்கள் அந்த பக்கமாக நகர்ந்து வந்தது. கரு மேகம் கூட்டமாக வந்து சூரியனை மறைத்து விட்டது. இப்பொழுது சூரியனாக இருந்த சிற்பி நினைத்தான்.

என்ன இது... என்னையே இந்த மேகம் மூடி மறைக்குது என்றால் அது என்னைவிட பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். அதனால் இனிமேல் சூரியனாக இருக்க வேண்டாம்... நாம் மேகமாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

இயற்கை அவனை மேகமாக மாற்றிவிட்டது. மேகமாக மாறி வான வீதியிலே ஜாலியாக உலா வந்து கொண்டிருக்கின்றான். எதிரிலே பெரிய பெரிய மலைகள். உயர உயரமாக வழியை அடைத்து நிற்கின்றது. மேகம் வேகமாக போய் மலையில் மோதிக் கொண்டது. அந்த மலையைத் தாண்டி அப்பால் போக முடியவில்லை. இப்பொழுது அந்த மேகம் நினைத்தது... நாம் எந்தத் தடையும் இல்லாமல் அத்தூரத்திலே மிதந்து வருகின்றோம்.

என்னைப் போக விடமால் தடுக்கின்றது என்றால் அந்த மலைக்கு எப்பேர்ப்பட்ட வலிமை இருக்க வேண்டும். இனிமேல் நாம் மேகமாக இருந்து பயன் இல்லை. மலையாக இருக்க வேண்டும். அதுதான் பெருமை என்று நினைத்தது. உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறி விட்டான். பெரிய மலை பூமிக்கும் வானத்துக்குமாக நிற்கின்றது. இனிமேல் எந்தக் கஷ்டமும் இல்லை என்று நினைத்தது மலை.

இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே கீழே ஏதோ சத்தம் கேட்டது. மலை குனிந்து பார்த்தது. கொத்திக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு சிற்பம் செய்து கொண்டிருந்தான். இப்பொழுது அந்த மலை நினைத்தது.

மலையை ஒருவன் உடைக்கின்றான் என்றால் அவன் எப்பேர்ப்பட்ட வலிமை உடையவனாக இருக்க வேண்டும். இனிமேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாறவேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் ஒரு உளியை வைத்துக் கொண்டு பழையபடியே ஒரு கருங்கல் பாறையை கொத்திக் கொண்டிருக்கின்றான் அந்த ஆள். இந்தக் கதையில் இருந்து என்ன தெரிகின்றது. தன்னுடைய உண்மையான பலம் என்ன என்பது தெரியாமலேயே தாவித் தாவி தடுமாறிக் கொண்டிருக்கின்றான் மனிதன் என்பதுதான். இனிமேலாவது நாம் அதைப் புரிந்து கொள்வோம்.

ஒரு குடும்பத் தலைவருக்கு விபரீதமாக ஒரு ஆசை வந்தது.

அதாவது ஒரு நாள் பூராகவும் புடைவை கட்டிக் கொண்டு மனைவி செய்கின்ற வீட்டு வேலைகள், சமையல் எல்லாம் தானே செய்ய வேண்டும், மனைவியை ஆண் வேடம் போட்டு வேலைக்கு அனுப்பிவிட வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

அதேமாதிரி செய்துவிட்டான். பெண் வேடத்திலே சமையல் செய்து கொண்டிருந்தான். இருட்டிப் போய்விட்டது. இந்த சமயத்திலே வாசல் கதவு தட்டுகின்ற சத்தம் கேட்டது. ஓடிப்போய் திறந்தான். பக்கத்து வீட்டு அம்மா கோப்பி பொடியோ எதுவோ வாங்குவதற்கு கிடுகிடு என்று உள்ளே வந்துவிட்டார். இவன் பயந்து போய் கமலா அம்மா.. நான் சுசீலா இல்லை. சுசீலாவினுடைய கணவன். பெண் வேடத்திலே இருக்கேன். சும்மா ஒரு சேஞ்சுக்காக என்றாராம். உடனே அந்த அம்மா வந்து பயப்படாதே நானும் கமலா இல்லை. கமலாவோட புருஷன். இதுவும் சும்மா ஒரு சேஞ்சுக்காகத் தான் என்றார்.

# தப்பிச் சென்று கிராமத்திற்குள் கொரோனாவைப் பரப்புவோம்

## கொரோனா நோயாளிகள் மிரட்டல்

(கொழும்பு)

**வைத்தியசாலையில் போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லையாயின், அங்கிருந்து தப்பிச் சென்று கிராமத்திற்குள் கொரோனாவை பரப்பப் போவதாக சிகிச்சை பெறும் நோயாளிகள் தெரிவித்துள்ளமை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.**

நாட்டில் கொரோனா இரண்டாவது அலை தீவிரமாக பரவி வருகிறது, தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை எட்டாயிரத்தை தாண்டி ஒன்பதாயிரத்தை நெருங்கவுள்ளது.

தற்போது இந்த நிலையை கட்டுக்குள் கொண்டுவர இலங்கை அரசாங்கம் மற்றும் சுகாதாரத்துறை மற்றும் பல அரச திணைக்களங்கள் கடுமையாக போராடி வருகின்றன.

இந்நிலையில் அவர்கள் தெரிவித்துள்ளமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் சிங்கள இணைய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திவுலப்பிட்டிய கொரோனா நோயாளர்கள் குழுவினரின் செயற்பாடு காரணமாக வைத்தியசாலை நிர்வாகம் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ளது. தங்களுக்கு கிடைக்கும் உணவு சுவையில்லை எனவும் போதுமான அளவு குளியலறை மற்றும் ஏனைய வசதிகள் இல்லை எனவும் கூறி நோயாளர்கள் குழப்பம் ஏற்படுத்தியுள்ளனர்.

நோயாளிகள், வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்களை அச்சுறுத்தியுடன், குறித்த வசதிகளை வழங்கவில்லை என்றால் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்று கிராமத்தில் கொரோனா பரப்புவோம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.


தற்போது கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ள திவுலப்பிட்டிய வைத்தியசாலையில் 102 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த குழுவினருக்குள் டொக்யார்ட் நிறுவனத்தில் பணியாற்றிய நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான 15 பேர் இவ்வாறு வைத்தியசாலை ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இந்த நபர்களுக்கான டொக்யார்ட் நிறுவனம் உலர் உணவுகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதாக வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அச்சுறுத்தல் காரணமாக வைத்தியசாலையை சுற்றியுள்ள பொலிஸாருக்கும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளதாக அந்த இணையத்தளத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா தொடர்பில் மூலோபாயம் கையளிப்பு




(கொழும்பு)

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கான 6 விடயங்களை உள்ளடக்கிய மூலோபாயம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கையளித்துள்ளது.

ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இந்த மூலோபாயத்தை கையளித்ததாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான வைத்தியர் வாசன் ரத்னசிங்கம் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கொரோனா அபாயம் 'மொபைல் அப்' அறிமுகம்



(கொழும்பு)

தொடர்பு தடமறிதலுக்காகவும் கொரோனா வைரஸ் அதிக ஆபத்துள்ள பகுதிகளின் பயணர்களை எச்சரிக்கவும் மொபைல் அடிப்படையிலான "அப்" ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

இந்த "அப்" இல் பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

அதிக ஆபத்துள்ள பகுதிகள் குறித்து பயணர்களை எச்சரிக்க இந்த "அப்" உதவும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் மினுவாங்கொட கொரோனா வைரஸ் கொத்தணியுடன் இணைப்பில் இருந்த நபர்களின் தொடர்புகளைக் கண்டறிவதில் அதிகாரிகள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில், தொடர்பு தடமறிதலுக்காக மொபைல் "அப்" உருவாக்கும் யோசனை கடந்த பல மாதங்களாக விவாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேசியத் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய திட்டம் நேற்று அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் குழு, வாழ்வாதார மேம்பாட்டுக்குழு, உள்நாட்டு உற்பத்தித்துறையை ஊக்குவிப்பதற்கான அபிவிருத்திக்குழு, கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்குழு என்றவாறு இராஜாங்க அமைச்சை பிரதானமாக நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய பிரதமர் அலுவலகத்தினால் இந்த வேலைத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# '20' இற்கு ஆதரவளித்ததன் மூலம் இனவாதிகளின் பிரசாரம் மெய்யாகியது

## இம்ரான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சமூகம் சார்ந்த ஒப்பந்தங்களை செய்துகொண்டா இருபதுக்கு ஆதரவு அளித்தார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பினார்.

மூதூரில் நேற்று முன்தினம் மாலை ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனை வினவினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆவது திருத்த சட்டத்துக்கு எதிரான போராட்டங்களிலும் கூட்டங்களிலும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட இரவு வரை எங்களுடன் ஒன்றாக இருந்தவர்கள், அதற்கு ஆதரவாக வாக்களித்ததன் நோக்கத்தை மக்கள் முன் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன் அவர்களுடன் என்ன ஒப்பந்தம் செய்தார்கள். தொல்பொருள் செயலணி உள்ளிட்ட காரணங்களைக் கூறி கிழக்கில் அபகரிக்கப்படும் சிறுபான்மை மக்களின் காணிகளைப் பாதுகாப்பது, எரிக்கப்படும் முஸ்லிம் ஜனாஸாக்களை தடுப்பது, இனவாதிகளிடமிருந்து எமது சமூகத்தையும் அவர்களின் பொருளாதாரங்களையும் பாதுகாப்பது போன்று ஏதாவது சமூகம் சார்ந்த ஒப்பந்தங்களைச் செய்து கொண்டா இவர்கள் இருபதுக்கு ஆதரவு அளித்தார்கள்.

கடந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பில்லை எனவும் இனி பொதுஜன பெரமுனதான் ஆளும் கட்சி. எனவே எதிர்க்கட்சியில் இருந்து ஒன்றும் செய்ய முடியாது. அதனால் தான் ஆதரவளித்தோம் என சிலர் கூறுவதை கேட்க முடிந்தது.

கடந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பில்லை என்ற விடயம் இவர்களுக்கு இப்போதுதான் விளங்கியதா? அவ்வாறு முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை எனில் ஏன் நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தீர்கள்?

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் பின்னணியில் பொதுஜன பெரமுன ஆளும் கட்சி தான் இருந்தது என தெரிந்தும் ஏன் பாராளுமன்ற தேர்த லில் ஏன் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டீர்கள்?

இருபதுக்கு ஆதரவு அளிக்கும் முன் உங்கள் பிரதேசத்தில் உங்கள் வெற்றிக்காக உழைத்த சிவில் சமூகம் மற்றும் உங்கள் ஆதரவாளர்கள் யாருடனாவது ஆலோசனை பெற்றீர்களா?

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவளித்ததன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை ஒழிக்கும் சர்வாதிகார ஆட்சிக்கு உதவி செய்தார்கள் என்ற அவப்பெயருடன் முஸ்லிம்கள் சலுகைகளுக்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தப் பக்கத்துக்கும் மாறுவார்கள் என்ற இனவாதிகளின் பிரசாரம் உண்மையாக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கடல் புறா

## அபாயத்தை மறைத்த அழகு

அநபாயன் வரவு கருணாகர பல்லவனுக்குக்கூட பெரும் அதிர்ச்சியைத் தந்ததென்றாலும், அநபாயன் அப்படி உதவி ஏதுமில்லாமல் தன்னந்தனியாக அந்த நீதி மண்டபத்துக்கு வந்தது சரியல்ல என்ற நினைப்பே அவன் சிந்தனையில் அந்தச் சில விநாடிகளில் ஓங்கி நின்றபடியால், அடுத்தபடி அநபாயனுக்கு என்ன தீங்கு நேருமோ என்ற திகிலுக்கே ஆரம்ப அதிர்ச்சி இடம் கொடுத்தது.

வாளும், வேலும் தாங்கிய நூறு கலிங்க வீரர்களுக்கு மேலிருந்த அந்த மண்டபத்திலிருந்து அநபாயன் தப்புவதும் அத்தனை எளிதல்ல என்று தோன்றியது இளைய பல்லவனுக்கு. அந்த இடத்தில் அநபாயனை எதிர்பார்க்கவும் இல்லை அவன். சிறையில் உணவுச்சீலைச் செய்தியைப் படித்ததும், 'ஒன்று சிறையிலிருந்து நீதிமண்டபத்திற்குப் போதும்போது மீட்கப்படுவோம்.

அல்லது நீதிமண்டபத்திலிருந்து கொலைக்களத்துக்குப் போகும் வழியில் மீட்கப்படுவோம்' என்று திட்டமாக நம்பியதன்றி, கூலவாணிகனுக்கும் அதை எடுத்து ஓதியிருந்த இளையபல்லவன், தன் கணக்குத் தப்புக்கணக்காகி விட்டதையும் எந்த நீதிமண்டபத்தை அநபாயன் அணுக முடியாதென்று அவன் நினைத்தானோ அந்த நீதி மண்டபத்துக்கே அநபாயன் வந்து விட்டதையும் எண்ணிப் பார்த்து, 'எந்தத் துணிவுடன் இவர் இங்கு வந்தார்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு விடையேதும் தெரியாமல் விழித்தான்.

கருணாகரபல்லவனது எண்ணங்களும் நீதி மண்டபத்தில் குழுமியிருந்த மற்றவர் எண்ணங்களும் இவ்விதம் வியப்பிலும் குழப்பத்திலும் ஈடுபட்டிருந்த சில விநாடிகள், நீதி ஸ்தானத்தில் அமர்ந்திருந்த அனந்தவர்மனுக்குப் பெரும் திகிலையும் சங்கடத்தையும் அளித்ததால் அவனது உணர்ச்சிகள் கொந்தளித்து நின்றன.

கொந்தளித்த உணர்ச்சி அலைகள் மோதும்போது முகமும் உதடுகளும் திடீரெனச் சிவந்தும், பின்வாங்கியபோது திடீரென வெளுத்தும் இரண்டு மூன்று முறைகள் மாறிமாறி பயங்கரத்துக்கும் பயத்துக்கும் அவன் மனம் இலக்காகியிருந்ததைக் குறிப்பிட்டன.

கருணாகர பல்லவனை விடுவிக்க அநபாயன் கண்டிப்பாய் முயலுவான் என்பதை அனந்தவர்மன் அறிந்திருந்தாலும் அந்த முயற்சியை நீதிமண்டபத்துக்குள் வைத்துக்கொள்வான் என்பதை அவன் சிறிதும் எதிர்பார்க்காததால்,




கணீரென அநபாயனின் குரல் நீதி மண்டபத்தில் ஊடுவிச் சென்றதும் அவன் சில விநாடிகள் சிலையென உட்கார்ந்துவிட்டான்.

பிறகு மெள்ளச் சமாளித்துக் கொண்டு, வீரர்கள் பக்கம் கண்களைச் செலுத்தினான். அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு வீரர்கள் வாயிற்படியை நோக்கிக் காலடி எடுத்து வைக்கவும் முற்பட்டனர். மீண்டும் அதிகாரத்துடன் எழுந்த அநபாயனின் குரல் அந்த கால்களைக் கற்சிலைகளாக அடித்தன.

வீரர்கள் அசையுமுன்பாகவே, "இந்த மண்டபத்திலிருப்பவர்கள் யார் அசைந்தாலும் சரி, இருப்பிடத்தை விட்டு ஓர் அடி எடுத்து வைத்தாலும் சரி அனந்தவர்மன் அடுத்த விநாடி பிணமாகி விடுவான். கலிங்கத்துக்கு வேறு மன்னனைத் தேட வேண்டியிருக்கும்!" என்ற அநபாயனின் அதிகாரக் குரல் மறுபடியும் அந்த மண்டபத்தை ஊடுருவிச் சென்றது. அந்தக் குரலிலிருந்த திடத்தைக் கண்ட மக்கள் ஒருமுறை நடுங்கினர். அசைந்த வீரர் அசைவற்று நின்றனர்.

தான் மரண தண்டனை விதிக்க வேண்டிய நீதி மண்டபத்தில் தனக்கே மரண தண்டனை விதிக்க அநபாயன் முற்பட்டதைக் கண்டு ஒரு விநாடி நடுங்கிய அனந்தவர்மன், வாயிற்படியில் மறுபடியும் தன் பிரேதக் கண்களை ஓட்டி அங்கு அநபாயன் ஆயுதமெதையும் உருவிப் பிடிக்காமல் வெற்றுக் கையுடனே நின்றதையும், அவனுக்குத் துணையாக யாருமில்லாததையும் கண்டு சற்றுத் தைரியம் கொண்டு "வீணாக மிரட்டுகிறான். அஞ்சாதீர்கள்! நெருங்கிப் பிடியுங்கள் அவனை!" என்று கூவினான்.

மறுவிநாடி, பிரேதக் கண்கள் உள்ளடங்கின. அச்சத்தால் உதடுகள் மீண்டும் வெளுத்தன. திடீரென எழுந்த அநபாயனின் சிரிப்பொலி அந்தப் பெரும் நீதி மண்டபத்தின் சுவர்களில் தாக்கிப் பலவிதமாக எதிரொலி செய்ததால் தன்னை நோக்கி நூற்றுக்கணக்கான பேர்கள் நகைப்பது போன்ற பிரமை ஏற்பட்டது அனந்தவர்மனுக்கு.

அநபாயனைச் சிறை செய்ய உத்தரவிட்டதும் கண்ணிமைக்கும் நேரத்தில் அவனுக்குப் பின்னால் நின்றிருந்த ஓர் உருவம் தன்னை நோக்கி நாணில் ஊன்றி இழுக்கப்பட்ட பெரும் கணையும் வில்லுமாகக் காட்சியளித்ததைப் பார்த்த அனந்தவர்மன், உண்மையைப் புரிந்துகொண்டான். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியால் நிலைமை புரியாதவர்களுக்கும் புரிய வைக்க அநபாயன் மீண்டும் பேசினான்.

"புரிகிறதா அனந்தவர்மா? முன்னேற்பாடின்றி இந்த மண்டபத்துக்கு வர நான் முட்டாளல்ல. இதோ தொடுக்கப்பட்டிருக்கும் அம்பு நேராக உன் இதயத்துக்குக் குறி வைக்கப்பட்டிருக்கிறது. கணையின் நுனி நல்ல எஃகால் செய்யப்பட்டு விஷம் தோய்க்கப்பட்டிருக்கிறது. அம்புக்கு வாயுவேகம் கொடுக்க அதன் அடிப்பாகத்தில் புறாவின் இறகுகள் பொருத்தப்பட்டிருக்கிறன.

இது எய்யப்பட்டால் உன் கதி என்னவாகுமென்பதை நான் சொல்லத் தேவையில்லை?" என்ற சொற்கள் அவன் முதலில் வெளியிட்ட சிரிப்பைத் தொடர்ந்து கடுமையாக வெளிவந்தன.

அன்று ஆச்சரியப்படுவதற்காகவே தாங்கள் அந்த நீதிமண்டபம் வந்ததாக மக்கள் நினைத்தார்கள். நாண் கயிற்றைக் காதுவரையில் இழுத்து அம்மைக் குறி வைத்து வில்லைத் தாங்கி நின்ற உருவத்தைக் கண்டதும், மண்டபத்திலிருந்த வீரர்களும் மற்றவர்களும் அப்படியே வியப்பில் ஆழ்ந்தார்களானாலும் அந்த வியப்பு மற்ற எல்லோரையும்விட இளைய பல்லவனையே அதிகமாக ஆட்கொண்டது.

வில்லேந்தி நின்றது நாணிழுக்கப்பட்ட வில்லைவிட வளைந்த புருவங்களையுடைய கடாரத்தின் இளவரசி காஞ்சனாதேவி. அவளது மலர்க்கரங்கள் வில்லேந்தி நின்ற உறுதியைக் கண்டு பெரிதும் வியப்பெய்தினான் கருணாகர பல்லவன். அவன் உணர்ச்சிகளை அந்தச் சமயத்தில் தொட்டது காஞ்சனாதேவியின் இணையற்ற அழகினால் ஏற்பட்ட ஆசையா, அவள் வில்லைப் பிடித்து நின்று காட்டிய தைரியத்தைக் கண்டு ஏற்பட்ட ஆச்சரியமா, அல்லது இத்தகைய அபாயமான பணியில் அவள் ஈடுபட்டுவிட்டாளே என்பதால் ஏற்பட்ட அச்சமா? என்பது அவனுக்கே விளங்கவில்லை.

வில்லைப் பிடித்த இடது கரத்தின் விரல்கள் மடிந்து கிடந்த அழகும், நாணில் பொருந்தியிருந்த அம்பையும் நாணில் அந்தப் பகுதியையும் பிடித்து இழுத்துக் கொண்டு காதுக்கருகில் இருந்த கட்டை விரலும் ஆட்காட்டி விரலும் ஏதோ காதுக்குச் சேதி சொல்வது போலிருந்த கம்பீரமும், அவள் மலர்க் கண்கள் தன்னைக்கூட நோக்காமல் வாளின் நுனியையும் அனந்தவர்மன் மார்பையும் இணைத்துப்பார்த்துக் கொண்டிருந்த திடமும், மார்புக்குக் குறுக்கே வருடிச் சென்ற நாண் கயிற்றின் கோலமும், இளைய பல்லவன் இதயத்தைப் பலபடி அலைக்கழித்தன.

அம்பெய்ய வந்த அந்தச் சமயத்திலும் அவள் கொண்டையைத் தூக்கி மிக இன்பமாக முடிந்திருந்ததையும், அந்தக் கொண்டையை அலங்காமல் நிறுத்த ஓர் ஆபரணம் அதைச் சுற்றி ஓடியதையும் கவனித்த கருணாகர பல்லவன், அவள் வாளெடுத்துச் சுழற்றினாலும் அந்தக் கொண்டை மயிர் அவிழ்ந்து விழுந்து அவளுக்குச் சங்கடம் விளைவிக்காதென்பதைப் புரிந்துகொண்டான்.


முதல் நாளிரவு கட்டியதுபோல் அவள் சேலையை அன்று கட்டாமல், கால்களுக்கிடையே சுருட்டி வளைத்துக் கட்டியிருந்ததன்றி, இடையிலும் சல்லடத்தை வைத்துப் பிணைத்திருந்தாளாகையால் அவள் எத்தனை நேரம் வேண்டுமானாலும் எத்தகைய இடுக்கணுமின்றிப் போராட முடியும் என்பதையும் உணர்ந்து கொண்டான் இளையபல்லவன்.

அவள் இடையிலிருந்த நீண்ட வாளும் அவள் போர்ச் சன்னத்தைத் தெரியப்படுத்தியது.

இருப்பினும் அவளிடம் முதல் நாளே ஏற்பட்டுவிட்ட விபரிக்க இயலாத ஓர் அன்பினால் அவள் நிலை பற்றி அச்சமே கொண்ட கருணாகர பல்லவன், சில விநாடிகள் மலைத்தே நின்றான்.

(தொடரும்...)

# நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே ஒரு முகக்கவசத்தை பயன்படுத்துங்கள்



## சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்து

**(கொழும்பு)**

**முகக்கவசங்கள் அதிக பட்சம் 4 மணித்தியாலங்கள் மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பொது சுகாதார சிறப்பு மருத்துவர் உத்பலா அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனா இரண்டாவது அலை தீவிரமாக பரவி வருகிறது. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை எட்டாயிரத்தை தாண்டி போய்க் கொண்டிருக்கிறது.

தற்போதே இந்த நிலையை கட்டுக்குள் கொண்டுவர இலங்கை அரசாங்கம் மற்றும் சுகாதாரத்துறை மற்றும் பல அரச திணைக்களங்கள் கடுமையாக போராடி வருகின்றன.

அனைவரும் சுய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகின்ற நிலையில் மாஸ்க் அணியும் முறை தொடர்பில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

4 மணித்தியாலங்களில் பயன்படுத்திய பின்னர் அகற்றப்படும் முகக் கவசத்தை பாதுகாப்பாக அகற்றி குப்பை தொட்டியில் போட வேண்டும். பின்னர் புதிய முகக் கவசம் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். வேலைக்கு செல்வோர். அத்தியாவசிய தேவைக்காக வெளியில் செல்வோர் இந்த நடைமுறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

முகக் கவசத்தை சரியான வகையில் பயன்படுத்தவில்லை என்றால் கொரோனாத் தொற்றுள்ள ஒருவரிடம் இருந்து கொரோனா பரவும் ஆபத்து உள்ளது.

நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதென்றால் மேலதிகமாக இரண்டு முகக் கவசங்களை கொண்டு செல்வது கட்டாயமாகும். அது உங்கள் சுகாதார பாதுகாப்பிற்கு நல்லது" என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

---

# மைக் போம்பியோ விஜயம்; ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் மைக் போம்பியோவின் இலங்கை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக ஜே.வி.யினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுயாதீனத்தன்மை மீது கைவைக்காதே என்ற கோசத்துடன் இந்தப் போராட்டம் இடம் பெற்றுள்ளது.




இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் எம்.பிக்கள் மற்றும் ஜே.வி.பி. கட்சி சார்ந்த பலர் பங்கேற்றனர். (ஜ-4)

---

# சீன-இலங்கை உறவில் அமெரிக்கா தலையீடு சீனா எச்சரிக்கை

(கொழும்பு)

தமக்கும் இலங்கைக்குமிடையிலான உறவில் அமெரிக்கா தலையீடு செய்வதாக சீனா எச்சரித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டீன் தொம்சன் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளரின் இலங்கை விஜயம் கடினமானதும் தேவையானதுமான தீர்மானங்களை மேற்கொள்ளவே அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இராஜதந்திர நடைமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை மற்றும் சீனாவிற்கிடையே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நட்பு இருப்பதாகவும் அதனால் அதற்கு மூன்றாந்தரப்பின் தலையீடு அவசியமில்லை என சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் தூதுக்குழுவுடன் அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கைக்கு வருவது பாரிய சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

---

# அதல பாதாளத்திற்குள் நாடு

## அரசை சாடிய ஐ.ம.ச.



(கொழும்பு)

கொரோனா இரண்டாவது அலையை கட்டுப்படுத்த தவறியுள்ளதன் மூலம் நாட்டை அதல பாதாளத்திற்குள் அரசாங்கம் தள்ளியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று அறி க்கை ஒன்றை வெளியிட்டு இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தற்போதைய நிலையில் நாடு இக்கட்டான நிலையில் உள்ளதாகவும், இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா இரண்டாவது அலை ஏற்பட்டமைக்கான காரணத்தை அரசாங்கம் இதுவரை தெரிவிக்க தவறியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடு கடும் பின்னடைவை சந்தித்துள்ள தற்போதைய சூழலில் அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதைக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

---

# எனக்கு சேறுபூசும் நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த 37 ஆண்டுகளாக சேவையாற்றிய ஊழியர்களையும் சபாநாயகரின் ஊழியர்கள் குழுவில் இணைத்து கொண்டதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.



மகிந்த யாப்பா அபேவர்தனவின் குடும்ப உறவினர்களை அலுவலகத்தில் பணிக்கு அமர்த்த அனுப்பி வைக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரம் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"எனக்கு சேறுபூசும் கதை ஒன்றை புனைந்துள்ளனர். நான் அவற்றுக்கு பதிலளிக்க போவதில்லை. இதனை விட முக்கியமான வேலைகளை நான் செய்ய வேண்டியுள்ளது.

இவர்கள் கூறும் நபர்கள் கடந்த 37 ஆண்டுகளாக என்னுடன் இருந்தவர்கள். அவர்களே தற்போதும் என்னுடன் பணியாற்றுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

---

# பி.சி.ஆர்.சோதனைக்கு பயந்து தப்பியோடிய 18 பேர்

(கொழும்பு)

பேலியகொட மீன் சந்தையுடன் சம்பந்தப்பட்ட கொரோனா கொத்தணி இணைப்பாளர்கள் எனக் கருதப்படும் நபர்களிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேலியகொட மீன்சந்தை இணைப்பாளர்களில் பி.சி.ஆர்.பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு செல்ல மறுத்த 18 பேர் சந்தைக்கு அருகில் உள்ள கழிவுநீர் கால்வாயில் குதித்து அடுத்த கரைக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களை பிடிப்பதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-7)

# பரீட்சை நடத்தும் செயன்முறையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் பரீட்சை நடத்தும் செயன்முறையை நவீனமயப்படுத்தல் வேண்டுமென அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பிரதானமாக வருடாந்தம் பாடசாலைக் கல்வி தொடர்பான தேசிய பரீட்சைகள் 4 உம் நிறுவன ரீதியான பரீட்சைகள் 325 உம் நடத்திவருகின்றது என அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், குறித்த பரீட்சைகளை நடத்துவதில் அதிக பணிகளை திணைக்களத்தின் பணியாளர்கள் பொதுவான அலுவலக முறைகளைக் கையாண்டு மேற்கொள்ளப்படுவதுடன், பரீட்சைகளின் துல்லியத்தையும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக பரீட்சை முறையை டிஜிற்றல் முறைமைப்படுத்தலின் தேவை தொடர்பாக அமைச்சரவையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பரீட்சைத் திணைக்களத்தின் முகாமைத்துவ செயன்முறையை நவீனமயப்படுத்துவதற்கு தேவையான இணையத்தள வசதிகள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் குறித்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் குறித்த பயிற்சிகளை பணியாளர் குழாமைப் பயிற்றுவிப்பதற்கும், பரீட்சை மதிப்பீட்டுச் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக மாகாண மட்டத்தில் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களை நிறுவுவதற்கும் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பிள்ளையான் கட்சியினரால் மக்கள் கடும் பாதிப்பு



(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் சுயநலத்துடன் செயற்பட்டு வருகின்றமை காரணமாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம் சாட்டினார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக வாக்களிக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் இது ஜனநாயக விரோதமான செயல், இந்த நாட்டை பின்கொண்டு செல்லும் செயல் என்ற அடிப்படையில் அதற்கு எதிராக வாக்களித்திருந்தோம்.

இதன்போது, இஸ்லாமிய சகோதரர்கள் சிலர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றார்கள்.

அது தொடர்பாக பல கருத்துகளை பலரும் கூறி வருகின்றனர்.

என்னைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய சகோதரர்கள், தங்களுடைய எதிர்காலம் தொடர்பாக ஏதேனும் ஒப்பந்தங்கள் செய்து அதற்கு ஆதரவாக வாக் களித்திருக்கலாம் என நான் கருதுகின்றேன் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# றிசாத்தின் மறியல் நீடிப்பு



(கொழும்பு)


பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தாக்கல் செய்த பிணை மனுவை கோட்டை நீதவான் நிராகரித்துள்ளார்.

அவரை நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# பி.சி.ஆர். மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு கொரோனா

(கொழும்பு)

பேலியகொடை மீன் சந்தையில் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்ட கொழும்பு நகரசபையின் பொதுச் சுகாதாரத் திணைக்களத்தில் குறைந்தது ஒன்பது அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், கொழும்பில் கடந்த 18 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை மொத்தம் 5ஆயிரத்து 368 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 937 பேருக்கு. கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2155

### றோசான்




உடல் நிலை சரியில்லாத போது
தான் உணர்ந்து கொண்டேன் தோழியை
இன்னொரு தாயாக...!

### லோஜனா

இந்த அளவிற்கு நேசிக்க
நம்மிடம் என்ன
இருக்கிறது என்று
யோசிக்க வைக்கும்
ஒருவரை, தம் வாழ்வில்
கடக்காதவர்கள்
அனைவரும்
துரதிர்ஷ்டசாலிகளே..!

### செல்வம்

எல்லா கஷ்டங்களும்
தீர்ந்த பிறகு தான் சிரிப்பேன் என
நினைத்துக் கொண்டிருந்தால் சாகும்
வரை எவராலும் சிரிக்கவே முடியாது..!



### சுதன்



நேசிக்கத்
தெரியாத
மனிதர்களிடம்...
நேசத்தை
எதிர்பார்ப்பது
முட்டாள்தனம்...

### காவியா

பெண் அழகுனு எல்லோருக்கும் தெரியும்...
ஆனால் ஆண் எவ்வளவு அழகுனு
அவனை ஆழமாக நேசிக்கும் பெண்ணுக்கு
மட்டுமே தெரியும்!!!



### ஸ்டாலினி

ஆண், பெண் நட்பு...
ஒரு பெண் நெருங்கி ஒரு ஆணிடம் அதிக
அன்பு வைத்து பேசினால்... அது காதல்
இல்லை. அந்த பெண் நடத்தைக் கெட்டவள்
என தவறாக நினைத்து விடாதீர்கள்...
அது ஒரு தாய் தன் மகன் மீது வைத்துள்ள
அன்பை போன்றது... என்று தெரிந்து
கொள்ளுங்கள்... தோழி என்ற உறவு
உலகின் புனிதமான தூய்மையான உறவு..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 36 பேருக்கு நியமனங்கள்

(திருமலை)

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் தொழில் வழங்கும் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின்கீழ் மொரவெவ பிரதேசத்தில் முதலாம் கட்டத்தில் 36 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.



திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில அத்துகோரலவினால் நேற்று இந்நியமனங்கள் வழங்கி வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப சமூகத்தில் மிகவும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கான பயிலுநர் நியமனக் கடிதங்கள் பெறுவதற்கான முதல் கட்டமாக 34 ஆயிரத்து 818 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 412 பொலிஸார் தனிமை

(கொழும்பு)


மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 412 அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களில் 57 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருப்பதாகவும் 355 பேர் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் மேல் மாகாணத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 10 அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஆலய வழிபாடு

# ஏன் – எதற்கு – எப்படி



## கோவில்கள் தோன்றியது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

கற்கோவில்கள் அமைக்கப்படுவதற்கு இவைதான் முன்னோடியாக இருந்தன. இவைதான் கோவில்கள் தோன்றக் காரணமாக இருந்தன. மக்களின் சிந்தனை வட்டம் விரிவடைய, விரிவடைய இலை பந்தல் ஆலய வழிபாட்டிலும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின..

தங்களுக்கு விருப்பமான இடங்களில் எல்லாம் இறை உருவங்களை அமைத்தனர். மலைகள், கடலோரங்கள், ஏரிக்கரை ஓரங்கள், அடர்ந்த காடுகளுக்கும் சென்று இறைவன் உருவங்களை அமைத்தனர்.

இதற்கு பிறகுதான் இறை வழிபாட்டில் ஒரு முக்கிய மாற்றம் நிகழ்ந்தது. மலை, காடு, ஏரி, குளம், கடலோரம் போன்ற பகுதிகளில் உள்ள கடவுளை ஊருக்குள் அழைத்து வந்து எழுந்தருளச் செய்ய விரும்பினார்கள். இந்த வழிபாடு மாற்றத்துக்கான குறிப்புகள் சங்ககால பாடல்களில் உள்ளன.

இது ஊர்கள் தோறும் இறை வழிபாட்டை வியாபிக்கச் செய்தது. எங்கெல்லாம் இறை திருவுருவங்களை பிரதிஷ்டை செய்தார்களோ, அங்கெல்லாம் கோவில் கட்டினார்கள். அந்த கோவில்களில் எழுந்தருளி உள்ள கடவுளுக்கு தினம், தினம் தடபுடல் விருந்து கொடுத்து வழிபட்டனர். உயிர்களைப் பலியிடுதல் என்பது இதில் இருந்துதான் தோன்றியது.

பின்னர் இறை வழிபாடுகளில் போட்டியும் புதுமையும் சேர்ந்தன. பலியிடுதல், மலர் தூவுதல், நைவேத்தியம் படைத்தல், பண் இசைத்து பாடுதல், வெறியாட்டு நடத்துதல் என்று தங்களது விருப்பங்களை எல்லாம் இறை வழிபாட்டில் புகுத்தினார்கள்.

பிறகு ஒரு காலகட்டத்தில் கடவுள் வடிவங்களை வீதி, வீதியாக எடுத்துச் செல்லும் பழக்கம் தோன்றியது. மக்கள் தங்கள் வீடு முன்பு நின்று கடவுளை வரவேற்று, உபசரித்து மனநிறைவு பெற்றனர். இதைத் தொடர்ந்து வந்த காலங்களில் மக்கள் சிந்தனை பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப சுயநலமாக மாறி இருந்தது. தெருவில் வந்து செல்லும் இறைவன் நிரந்தரமாக தம் வீட்டுக்குள்ளேயே இருந் தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்தனர்.

அதன் விளைவு மரத்தில் தோன்றி, மலைக் காடுகளில் தவழ்ந்து, ஊருக்குள் புகுந்த தெய்வம், வீடுகளுக்குள்ளும் வந்து விட்டது. அப்படி வந்த இறை திருவுருங்களை அரசர்கள், வசதி உள்ளவர்கள் வெளியில் அனுப்ப சம்மதிக்கவில்லை.

காலம் செல்ல.... செல்ல.... இது எங்கள் குல தெய்வம் என்று வரையறுத்துக் கொண்டனர். இதனால்தான் பல நூறு ஆண்டுகள் கடந்தும், பல தலைமுறைகளைக் கண்ட பிறகும் பல ஊர்களில் இன்றும் குலதெய்வ வழிபாடு உச்சத்தில் இருப்பதை பார்க்க முடியும்.

ஆக, இயற்கையோடு இயைந்த நம் முன்னோர்கள் வழிபாடு, மாறி, மாறி, அருவம், உருவ நிலைக்கு வந்து, அந்த உருவத்தை சுற்றி கோவில் எழுந்ததை புரிந்து கொண்டிருப்பீர்கள். ஐந்து வகை நிலங்களுக்கும் தனித் தனி தெய்வங்கள் இருந்ததை சங்க காலத்தில் உறுதி செய்தனர். காலம் மாறியது. சங்க காலம் மறைந்து, சங்கம் மருவிய காலம் உதயமானது.

இந்த மாற்றத்தால் இறை உருவம் தரும் சக்தியால் கடவுள் தங்களிடம் பேசுவதாக மக்கள் கருதினார்கள். அந்தக் கால புலவர்கள் இவற்றை சற்று கற்பனை சேர்த்து சுவைபட பாடினார்கள்.

இதற்கிடையே வேத சடங்குகள் எனும் வேள்வி முறை தோன்றியது. காடுகளிலும் நீர் நிலை ஓரங்களிலும் வேள்விகள் நடத்தப்பட்டன. வேள்வி நடத்தப்பட்ட இடங்கள் புனித பகுதிகளாக கருதப்பட்டன. அந்த இடங்களில் எல்லாம் பழந்தமிழர்கள் கோவில்களை கட்டினார்கள். அதனால் தான் தமிழ்நாடு முழுவதும் கோவில்களாக உள்ளன.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## முடங்கியது ஹற்றன்

(ஹற்றன்)

அதிக கொரோனா பரவல் ஏற்பட்டுள்ளதை அடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஹற்றன் நகரம் சமூக முடக்கல் ஊரடங்குக்கு உட்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் சவேந்திர சில்வா இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஹற்றன் நகரில் பத்துப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையிலேயே குறித்த தீர்மானத்தினை அரசாங்கம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## சிகரெட் விற்பனையில் ஈடுபட்டவர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் எப்பாவல பகுதியில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்த கடையின் உரிமையாளர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஆயிரத்து 300 சிகரெட்டுகளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## மறு அறிவித்தல் வரை மூடல்

(கொழும்பு)

கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட அனைத்து தொல்பொருட்காட்சியகங்களும் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியம் குறிப்பிட்டுள்ளது. மத்திய கலாசார நிதியத்தின் கீழ் காணப்படும் அனைத்து தொல்பொருட்காட்சியகங்களும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை, சிகிரியா, கதிர்காமம், காலி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் உள்ள அனைத்து தொல்பொருட்காட்சியகங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 200 |
| தக்காளி | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 |
| கோவா | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 180 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 70 | 70 | 100 |
| சின்னவெங்காயம் | 250 | 220-260 | 240 |
| பெரியவெங்காயம் | 140 | 140 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | .280 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 140 |
| கத்தரிதம்புள்ள | 140 | -- | 50 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 200 |
| தேசிக்காய் | 150 | 140 | 60- |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75-80 | 80 |
| இராசவள்ளி | 250 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 30 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | -- | -- |



# சிறுவர் அரங்கம்

## நண்பகல் தூக்கம்



ஒருநாள் மதியம் வெயில் அதிகமாக இருந்தது. மரத் தடியில் ஒருவன் நன்றாக தூங்கிக் கொண் டிருந் தான்.

அந்த வழியாக வந்த ஒரு விறகுவெட்டி அவ னைப் பார்த்து இவன் கடு மையான உழைப்பாளி போல தெரிகிறது.

உழைத்த களைப்பால் தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகிறான் என நினைத்துக் கொண்டு சென்றான்.

அடுத்ததாக திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான். இரவு முழுவதும் கண்விழித்து திருடி இருப் பான்.

அதனால்தான் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டது போல் தூங்குகிறான் என் நினை த்துக்கொண்டு சென்றான்.

மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் வந்தான். காலை யிலேயே நன்றாக குடித்து விட்டும் குடிமயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கிறான் என நினைத்துக்கொண்டு சென்றான்.


சற்று நேரத்தில் துறவி ஒருவர் வந்தார். இந்த நண்பகலில் இப்படி உறங் கும் இவர் முற்றும் துறந்த ஞானியாகத்தான் இருக்க வேண்டும் என அவரை வணங்கிவிட்டுச் சென் றார்.

**நீதி: நாம் எப்படியோ நம் எண்ணங்களும் அப்படியே.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஜூலை-26

07



ஆர்ட்டிமிஸ் ஆலயம்

பிலிப் குழந்தையையே வைத்த கண் விலகாமல் பார்த்துக் கொண்டிருந் தார். இன்றைக்கு என்ன திகதி?

356, ஜூலை 26. பதில் வந்தது தளபதியி டம் இருந்து. நல்லது புறப்படலாம். அடுத்த விநாடி அந்தப்புரத்தில் இருந்து வெளியே வந் தார் மன்னர் பிலிப்.

அன்று இரவு முழு க்க மன்னர் பிலிப்புக்குத் தூக்கமே வரவில்லை. மகிழ்ச்சி, சந்தோசம், உற் சாகம். கண்களை மூடிக் கடவுளை வேண்டினார்.

கடவுளே, சந்தோச மான செய்திகள் அடுக்க டுக்காகக் காதில் விழு ந்து விட்டன. கண்பட்டு விடுமோ என்று பயமாக இருக்கிறது. ஏதேனும் கசப்பான செய்தி இருந் தால் அது என் கவனத்தி ற்கு வர ஏற்பாடு செய்.

பொழுது விடிந்தது. மன்னரைப் பார்ப்பத ற்காக சில வீரர்கள் வந் திருந்தனர். அவர்க ளைப் பார்த்த மாத்திரத் திலேயே ஏதோ அவசரச் செய்தி கொண்டு வந்தி ருக்கிறார்கள் என்பது மன்னருக்குப் புரிந்து விட்டது.

வந்த விடயத்தைச் சொல்லுங்கள். ஆர்ட்டி மிஸ் ஆலயம் எரிந்து விட்டது மன்னரே. ஆசியா மைனரின் (Minor Asia) எபீஸஸ் என்கிற இடத் தில் உள்ள ஆர்ட்டிமிஸ் என்கிற தெய்வத்தின் ஆலயம் அது. யாரோ ஒரு பைத்தியக்காரனின் கைங்கர்யம்.

பதில் எதுவும் பேச வில்லை. பேசுவதற்கு அப்போது வார்த்தை களும் அவரிடம் இல்லை. கடவுளை நினைத்துக் கொண்டார். சட்டென்று மகனின் நினைப்பு வரவே அந்தப்புரத்தை நோக்கி நடந்தார். குழந்தை ஆழ் ந்து உறங்கிக் கொண்டி ருந்தது.

குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழாவை தடல் புடலாக நடத்தினார் பிலிப்.

அக்கம் பக்கத்து தேச த்து மன்னர்கள், உறவி னர்கள், குடிமக்கள் எல் லோரும் மன்னர் பிலிப் பின் மாளிகையில் நிரம்பி யிருந்தனர்.

வந்திருந்த அத்தனை பேரையும் நன்றாக உப சரித்து அனுப்ப உத்தர விட் டார் மன்னர். நூற்றியாறு வகை பதார்த்தங்கள் விரு ந்தில் பரிமாறப்பட்டன.

அது என்ன நூற்றி யாறு? அதன் கூட்டுத் தொகை ஏழு. இதுதான் மாசிடோனியர்களின் அதிர்ஷ்ட எண். மாளி கையின் மைய மண்ட பத்தில் எல்லோரும் குழுமியிருந்தனர். மன் னர் பிலிப் வந்தார். குழ ந்தைக்கும் தாய்க்கும் அலங்காரங்கள் செய்யப் பட்டிருந்தன.

என்னுடைய மகனு க்கு அலெக்சாண்டர் (Allexader III) என்று பெயர் சூட்டுகிறேன்.

இளவரசர் அலெக் சாண்டர் வாழ்க! வாழ் த்துக் கோசத்தைத் தொட ங்கி வைத்தவர் தளபதி பார்மீனியோ.

இதற்காகவே காத்துக் கொண்டிருந்தவர்கள் போல விழாவுக்கு வந் திருந்த விருந்தினர்கள், மாசி டோனிய வீரர்கள் என எல்லோரும் அரண் மனை அதிரும் அளவு க்கு வாழ்த்துக் கோசங் களை இடைவெளி இல்லாமல் எழுப்பினர்.

(தொடரும்)

தேவையில்லாதவற்றை விலைக்கு வாங்கினால் தேவையுள்ளவற்றை விரைவில் விற்க நேரிடும்.
- பெஞ்சமின் ஃபிராங்கிளின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூடாத கூட்டங்கள் கூடுவதும் கூடங்கள் மாடங்கள் ஏறுவதும்...

காட்டில் வாழ்ந்த நரியொன்று ஒருநாள் வீட்டுப் பூனையைச் சந்திக்க நேர்ந்தது.

பூனையாரே! நீங்கள் நல்ல குழுகுழுப்பாக இருக்கிறீர்கள். என்ன சாப்பிடுகிறீர்கள் என்று வினவியது நரி.

எங்கள் வீட்டில் பசும்பால் உள்ளது. காலையும் மாலையும் பசும்பால் குடிப்பேன். போதாக் குறைக்கு மாமிச உணவும் என்றது பூனை.

இதைக்கேட்ட நரிக்கு நா ஊறியது. பூனையாரே! என்னையும் உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்களா? என்று கேட்டது நரி.

சரி என்னுடன் வாருங்கள் எங்கள் வீட்டுக்குப் போவோம் என்று பூனை அழைக்க, நரி பின்தொடர்ந்தது.

இரவுவேளை பூனையும் நரியும் வீட்டுக்குள் நுழைந்தன.

அங்கு ஒரு பெரிய சட்டியில் பசுப்பால் இருந்தது. ஆசை மேலீட்டால் முழுவதையும் குடித்தது நரி.

பால் குடித்து வயிறு முட்டியதும் பூனையைப் பார்த்த நரி பூனையாரே! நான் பாடப் போகிறேன் என்றது.

பூனையோ பதறி அடித்து நரியாரே நீர் பாடினால் என் எஜமான் எழுந்து உன்னை அடித்துக் கொன்று விடுவார் பாடாதே என்றது பூனை.

பூனையாரே! நீர் என்ன சொன்னாலும் நான் பாடப் போகிறேன் என்று கூறியபடி நரி ஊளையிட்டது. அவ்வளவுதான் பூனை பாய்ந்தடித்து ஓடித் தப்பியது.

நரியின் ஊளைச் சத்தம் கேட்டு எழுந்த எஜமான் தன் வீட்டுக்குள் நரி நுழைந்திருப்பதை அறிந்து அதனை அடித்துக் கொன்று வீதி ஓரத்தில் தூக்கி எறிந்து விட்டார்.

இஃது நடந்து சில தினங்களாக, தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த நரி ஒன்றைக் காணவில்லை என நரிக்கூட்டத் தலைவருக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

சரி, நரியைத் தேடுவோம் என நரிக்கூட்டம் புறப்படுகிறது.

பல இடங்கள் தேடி அலைந்து ஈற்றில் ஓர் ஊரின் வீதியோரத்தில் நரி இறந்து கிடப்பதை நரிக்கூட்டம் கண்டது.

நரியாருக்கு என்ன நடந்திருக்கும். இந்த குடிமனைப் பக்கம் நரி வந்ததற்கு என்ன காரணம் இப்படி நரிக்கூட்டத் தலைவர் ஆராய்ந்தார்.

கூடாத கூட்டங்கள் கூடியிருப்பார் போல என்று ஒரு நரி கூறியது. இன்னொரு நரியோ! கூடாத கூட்டங்கள் கூடியிருந்தாலும் பரவாயில்லை. கூடங்கள், மாடங்களும் ஏறியிருப்பார் போல என்றது.

கூடங்கள், மாடங்கள் ஏறியிருந்தாலும் பரவாயில்லை நாதங்கள், கீதங்கள் இசைத்திருப்பார் போல, என்றது இன்னொரு நரி.

இதைக்கேட்ட நரிக்கூட்டத் தலைவன்; நாதங்கள், கீதங்கள் இசைச்சத்தாலதான் இந்த நாசங்கள், மோசங்கள் நடந்திருக்குது எனக் கூறி முடித்தது.

ஆக, கூடாத கூட்டத்துடன் சேர்வது ஆபத்தானது. அதுதான் என்றால், கூடாத கூட்டத்தை அழைத்து விருந்து கொடுத்து உபசரித்தால் அமெரிக்கா விடுமா என்ன? கொரோனாக் காலத்தில் இலங்கைக்கு சீனத் தூதுக் குழு வரலாம் என்றால் ஏன் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் வரக்கூடாது. அதுதான் வந்துள்ளார்.

அட, காலம் பிழைத்தால் கறுத்தார்தான் என்ன செய்ய முடியும். எதையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# கொரோனாவினால் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நிதியுதவியை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் முன்னர் நாட்டு மக்கள் மீது அதீத பற்றுடையவர்கள் என்றே தங்களை காண்பித்துக் கொண்டது. தற்போது மக்கள் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அரசாங்கம் தான் எண்ணியது போல மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டு, 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டு அமைதி காத்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தற்போது வைரஸ் பரவலின் இரண்டாம் அலை பரவ ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தையில் மீன் கொள்வனவு செய்த மற்றும் மீன் விற்பனையில் ஈடுப்பட்ட சில வர்த்தகர்களை பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்யாமலே அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தி வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தால் அவருடன், அவருடைய குடும்பத்தினருக்கும் வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதுடன், வைரஸ் தொற்றினால் இவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதன் பின்னரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர்.

இதனால் மேலும் நெருக்கடிகள் ஏற்படுவதற்கான வாய்ப்பே உள்ளது. அதற்கமைய வைரஸ் பரவல் மீண்டும் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த அரசாங்கமே அதனை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய கொழும்புக்குள்ளும் பல பொலிஸ் பிரிவுகளுக்கு ஒரு வார காலமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் கூட்டமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், அப்பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்களில் சுமார் பத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் இருப்பார்கள். அதேவேளை அவர்களுக்கு நிரந்தர வருமானமும் கிடையாது. பெரும்பாலும் இவர்கள் நாளாந்த வருமானம் பெற்றே வாழ்ந்து வருகின்றனர்.

அதனால் தற்போது அவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இந்நிலையில். இவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக 5ஆயிரம் ரூபாய் நிதியுதவியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-3)

# ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் பொதுமக்கள் சேவை தொடரும்

(கொழும்பு)

கொவிட் அச்சுறுத்தல் நிலைமை காணப்பட்டாலும் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறும் பொது மக்கள் சேவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி செயலகம் இதனை தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் சிந்தித்து தொலைபேசி, தபால் மற்றும் இணைய வழி மூலமாக பொது மக்களுக்கு சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜனாதிபதி செயலகத்தின் பொது மக்கள் சேவை பிரிவை 011 435 4550, 011 235 4550 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

011 233 8073 என்ற இலக்கத்தின் ஊடாக ஓம்புட்ஸ்மன் அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

அதே போல் 011 235 4354 என்ற இலக்கத்தின் மூலம் ஜனாதிபதி நிதியத்தை தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-7)

## ரவீந்திரநாத் தாகூரின் ஆன்மீகச் சிந்தனைகள்

### சுகம் தரும் பயணம்

❖ கடினமான நிலத்தைப் பண்படுத்தும் உழவனிடமும் சாலை அமைக்கும் போது கல்லுடைக்கும் தொழிலாளியிடத்தும் இறைவன் இருக்கின்றான். ஆனால், இறைவன் சாமானியர்களான நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

❖ மனிதன் மெய்யறிவு பெற்று விட்டால், மீண்டும் குழந்தை நிலையை அடைகின்றான். அந்நிலையை எதிர்பார்த்து இறைவன் நமக்காக காத்து நிற்கிறான்.

❖ தன்னம்பிக்கை என்னும் ஒளியோடு இருப்பவர்கள் வாழ்க்கைப் பாதையில் வெற்றிநடை போடுவார்கள். அவர்களால் மற்றவர்களுக்கும் வழிகாட்ட முடியும்.

❖ நாமோ கல்நெஞ்சம் கொண்டவர்களாக இருக்கிறோம். ஆனால், நம்மை எல்லாம் படைத்த இறைவன் கருணைஉள்ளம் கொண்டவனாக விளங்குகிறான்.

❖ பெண்கள் மகிழ்ச்சியோடு இருப்பதில் தான் ஒட்டுமொத்த குடும்பத்தின் மகிழ்ச்சியே அடங்கி இருக்கிறது. வாழ்வின் இசை என்பதே பெண்களின் சிரிப்பில் தான் புதைந்து கிடக்கிறது.

❖ இறைவன் தனக்கான நண்பர்கள் கிடைப்பார்களா என்று தேடுகின்றான். மனித மனங்களில் அன்பு இருக்கிறதா என்று எதிர்பார்க்கிறான்.

❖ மனித உறவுகள் அன்பினாலே பிணைக்கப்பட்டுள்ளன. அன்பு என்னும் பாலத்தின் வழியாகப் பயணம் செய்தால் தான், நம் வாழ்க்கை சுவையானதாகவும் பொருளுடையதாகவும் சுகமானதாகவும் இருக்கும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஜெயிப்பதற்கு உலகமே உள்ளது.
-தோமஸ் அல்வா எடிசன்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### சிந்தித்து செயலாற்று

❖ மனிதன் எந்த விடயத்திலும் அதற்கான விளைவைப் பலமுறை சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

❖ கடவுளை வழிபட்டால் ஒரு மடங்கு பலன். மகான்கள், அடியவர்களை வழிபட்டால் இருமடங்கு பலன்.

❖ ஒருவர் வாழும் வாழ்க்கை பிறருக்கும், நாட்டுக்கும் பயன் தருவதாக இருக்க வேண்டும்.


❖ நல்லவர்கள், பெரியவர்களை வணங்கா விட்டாலும், அலட்சியப்படுத்துவது கூடாது.

❖ வயலில் இட்ட விதை முளைத்து பன்மடங்கு பலனளிப்பது போல, செய்த நல்வினை, தீவினைகள் பன்மடங்கு பெருகும்

# துஸ்யந்தன், ஆகீசனின் அரைச்சதம்

# யூனியன்ஸ் அணி அதிரடி வெற்றி





சிநேகபூர்வ வெற்றிக் கிண்ணம்-2020 தொடரினை (ஓல்ட் கோல்ஸ், AB, விக்ரோறியன்ஸ்) ஆகிய 3 கழகங்கள் இணைந்து நடத்துகின்றது. 30 பந்து மாற்றங்களைக் கொண்ட இத் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் 4 அணிகள் பங்குபற்றுகின்றன. நான்காவது அணி யூனியன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தொடரில் முதலாவது போட்டி கடந்த வார இறுதியில் நடைபெற்றபோது யூனியன்ஸ் அணி, விக்ரோறியன்ஸ் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தங்களது முதல் வெற்றியை பதிவு செய்தது.

முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் அணி 30 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை பெற்றது. பிரியங்கன்-51, பிரசாந்-52, கிரிசாந்த்-50 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யூனியன்ஸ் அணியை பிரவீன், மகிரதன் 02, மோகன்ராஜ், சயந்தன் - 01 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 26 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை பெற்றது. துஸ்யந்தன்-62, ஆகிஸன்-57, ரகுபதி-18 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் விக்ரோறியன்ஸ் அணியின் சிந்துஜன், கஜேந்திரன், பிரசாந், கிரிசாந் தலா -01 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (4)

# தெறிக்கவிட்டது பஞ்சாப்; தோல்வி அடைந்தது கொல்கத்தா

ஐ.பி.எல்.தொடரின் 46 ஆவது லீக் ஆட்டம் ஷார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஷூப்மான் கில் (57), மோர்கன் (40) ஆகியோரைத் தவிர மற்ற பட்ஸ்மன்கள் நிதிஷ் ராணா (0), ராகுல் திரிபாதி (7), தினேஷ் கார்த்திக் (0), சுனில் நரைன் (6) சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 149 ரன்களே அடித்தது.

அதன்பின் 150 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கே.எல்.ராகுல், மந்தீப் சிங் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவராலும் தொடக்கத்தில் அதிரடியாக விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

கே.எல்.ராகுல் 25 பந்தில் 28 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது பஞ்சாப் அணி 8 ஓவரில் 47 ரன்கள் எடுத்திருந்தது.

அதன்பின் 2ஆவது விக்கெட் இழப்பிற்கு மந்தீப் சிங் உடன் கிறிஸ் கெய்ல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

பஞ்சாப் அணி 13.4 ஓவரில் 100 ரன்களைத் தொட்டது. மந்தீப் சிங் 49 பந்தில் அரைச்சதம் அடிக்க, கிறிஸ் கெய்ல் 25 பந்தில் 2 பவுண்டரி, 5 சிக்சருடன் அரைச்சதம் அடித்தார்.

பஞ்சாப் அணி 147 ரன்கள் எடுத்திருக்கும்போது கிறிஸ் கெய்ல் 29 பந்தில் 51 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடு த்து நிக்கோலஸ் பூரன் களம் இறங்கினார்.


பஞ்சாப் அணி 18.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 150 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மந்தீப் சிங் 56 பந்தில் 8 பவுண்டரி, 2 சிக்சருடன் 66 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். (4)



# அடுத்த ஆண்டும் டோனி தான்

## காசி விஸ்வநாதன் தெரிவிப்பு



2021 ஐ.பி.எல்.தொடரில் சென்னை அணியின் கப்டன் யார் என்பது குறித்து அணியின் CEO காசி விஸ்வநாதன் தெளிவுபடுத்தியுள்ளார்.

அண்மையில் இந்தியாவின் நட்சத்திர வீரர் டோனி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றது ரசிகர்களுக்கு பேரதிர்ச்சியாக அமைந்தது.

இதைத்தொடர்ந்து, 2020 ஐ.பி.எல்.தொடரில் டோனி தலைமையில் களமிறங்கிய சென்னை அணி பிளே ஓப் சுற்று வாய்ப்பை இழந்தது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

இந்நிலையில் சென்னை அணிக்கு டோனி தொடர்ந்து விளையாடுவாரா? என கேள்வி எழுந்த நிலையில் அணியின் CEO காசி விஸ்வநாதன் தெளிவுபடுத்தியுள்ளார்.

நிச்சயமாக, 2021 ஆம் ஆண்டில் டோனி சி.எஸ்.கேவை வழிநடத்துவார் என்று நான் மிகவும் நம்புகிறேன்.

ஐ.பி.எல்.போட்டியில் அவர் மூன்று முறை கிண்ணம் வென்று தந்துள்ளார்.

நாங்கள் பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெறாத முதல் ஆண்டு இது.

ஒரு மோசமான ஆண்டால் நாம் எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்று அர்த்தமில்லை எனவும் காசி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். (4)

# சிக்கலில் மாட்டினார் ரிஷப் பண்ட்



இந்திய அணியின் இடது கை பட்ஸ்மேன் மற்றும் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட். இவர் தற்போது ஐ.பி.எல்.தொடரில் டில்லி கேப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

ஒருநாள் மற்றும் இருபது 20 போட்டியில் கேஎல் ராகுலும், டெஸ்ட் போட்டியில் விருத்தி மான் சகாவும் இவருக்கு போட்டியாக உள்ளனர்.

ஐ.பி.எல். தொடர் முடிந்தவுடன் இந்திய அணி அவுஸ்திரேலியா செல்கிறது. தற்போதில் இருந்தே அதற்கு தயாராகி வருகிறது. முதற்கட்டமாக வீரர்கள் உடற் தகுதியுடன் உள்ளார்களா? என பிட்னெஸ் டிரைனர் பரிசோதித்து வருகிறார்.

அந்த வகையில் ரிஷப் பொண்ட்-ஐ பார்த்த டிரைனர் மிரண்டு போனார். ஏன்னெறால் ரிஷப் பண்ட் அதிக எடையுடன் காணப்பட்டுள்ளார். இதனால் அவுஸ்திரேலியா தொடரின்போது தேர்வு ஆவது சந்தேகம் எனத் தெரிகிறது.

டிரைனர் தேர்வுக்குழுவிடம் ரிஷப் பண்ட் எடை குறித்து தகவல்தெரிவிப்பார். ஒரு வேளை எடையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சிக்கல் தான்.

ஒருநாள் மற்றும் இருபது-20 அணியில் இடம் பிடித்தாலும் கேஎல் ராகுல்தான் விக்கெட் கீப்பராக செயற்பட வாய்ப்புள்ளது. (4)

## கத்திமுனையில்...

கரணவாய் மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் நுழைந்த 5 பேர் கொண்ட கும்பல் தம்மிடம் இருந்த கத்தியை காட்டி அவர்களை அச்சுறுத்தி வீட்டில் இருந்த 15 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## ரக்பி வீரருக்கு...

யுள்ளார்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட நபர் கடந்த மூன்று மாதங்களில் எந்தவொரு போட்டிகள், நிகழ்வு களிலும் கலந்து கொள்ள வில்லை.

அவர் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா கொத்தணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-3)

## குருநகர், பாசை...

என்றும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

குருநகர் பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் பொதுமக்கள் இனிவரும் நாட்களில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

குருநகர், பாசையூர் பகுதிகள் மற்றும் மீன் சந்தைகளில் சுகாதார நடைமுறைகள் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரால் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும். அங்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுவது அவசியம்.

குருநகர் மற்றும் பாசையூர் மீன் சந்தைக்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்களோ அல்லது வெளியிடங்களிலிருந்தோ வருவோர் கடும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். குறித்த நடைமுறை இன்று காலையிலிருந்து நடை முறைப் படுத்தப்படும்.

எனவே பொதுமக்கள் குறித்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும். குறித்த நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குருநகர், பாசையூர் சந்தைக்கு வருவோர் கட்டாயமாக தமது பதிவினை மேற்கொண்ட பின்னரே அப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றார். (ம-3)

## கொரோனா 2...

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் அதிகளவில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதனால் அது சமூகப் பரவல் எனவும் கருத வேண்டாம். இது அனைத்துமே பரந்த கொத்தணியாக கண்டறியப்பட்டுள்ளது.

மக்கள் அவதானமாக இல்லாது போனால் சமூகப் பரவல் அதிகரிக்கும். அதேபோல் இரண்டாம் அலையின் தாக்கம் அதிகமாகும்.

இந்த வைரஸ் செயற்படும் விதம் மாறுபட்டதாகும். விரைந்து பரவும் தன்மை கொண்டுள்ளது.

எனவேதான் அதிகளவில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இன்று நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உள்ளனர்.

இவர்கள் மூலமாக கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது என்றார். (ம-3)

## அச்சுவேலியில்...

துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நவக்கிரிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வசாவிளானைச் சேர்ந்த தனபாலசிங்கம் இலட்சியசீலன் (வயது-34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நவக்கிரிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த சொகுசு கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## ஒரே நாளில்...

இலங்கையில் கோவிட்-19 காரணமாக நாளொன்றில் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 19 வயதுடைய ஒருவரும் அடங்கியுள்ளார்.

வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர், வீடே தேவை உடையவர் என்றும் நீண்டகாலமாக நோய்வாய்ப் பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு - 2 பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும் நேற்று உயிரிழந்தார்.

இறுதியாக உயிரிழந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.டி.எச் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆண் ஒருவரும் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

ஜா-எல பகுதியை சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவர் ராகம வைத்தியசாலையில் இருந்து ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்று உயிரிழந்ததாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பூநகரியில்...

நிலமாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கௌதாரி முனை தரைப் பகுதிக்குள் திடீரென கடல் நீர் புகுந்ததால் நாற்பது ஏக்கருக்கும் அதிகமான நெற் பயிர்கள் சேதம் அடைந்துள்ளதாக பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பகல் திடீரென கடல் நீர் கரையினுள் புகுந்துள்ளது.

அந்தப் பகுதியில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடல் நீர் புகுந்தமையால் 40 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்பயிர்கள் சேதம் அடைந்தது.

இதேவேளை கௌதாரி முனை வீதியும் சில மணிநேரம் வெள்ளத்தால் மூழ்கியிருந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-3)

## வயா...

இருந்து நேற்று முன்தினம் 34க்கும் அதிகமான கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலை மதில் கட்டுவதற்கு அத்திபாரம் வெட்டிய போதே, இந்த கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலை 1990ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அமெ...

குணவர்த்தன வின் அழைப்பின் பேரில் அவரது இந்த விஜயம் இடம்பெற்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தனது இலங்கைப் பயணத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை பம்பியோ சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் பேச்சின்போது இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்த அமெரிக்காவின் கவலைகளை எழுப்புவதோடு, மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் பம்பியோ விவாதிப்பார் என பம்பியோவின் துணை உதவி செயலாளர் ஆர்.தோம்சன் முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அத்துடன் அமெரிக்கா இலங்கை இடையிலான இரு தரப்பு உறவுகளை பல்வேறு துறைகளில் மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாகவும் தோம்சன் மேலும் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்காவின் மிக உயர்மட்ட பிரமுகர் பம்பியோ என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)





### மஹஜன சம்பத
திகதி 2020/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 4288
ஆங்கில எழுத்து N — வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 1 8 4 7 6
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB
சீட்டிழுப்பு திகதி 27-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2583
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 22 34 58 80
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2020.10.27
சீட்டிழுப்பு இலக்கம் - 334
N 08 53 54 78
ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### நீரோகா
திகதி 27/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0715
லக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 07 26 67 69

### மெகா பவர்
திகதி 27/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0655
வெற்றி எழுத்து E — சுப்பர் இலக்க 25 — வெற்றி இலக்கங்கள் 06 22 27 72

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1258 — நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 27.10.2020 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: V 27 55 67 71
SUPER 500 விசேட இலக்கம் 2 8 2 7
51,717,739.60
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

### ராசி அதிர்ஷ்டம்
திகதி 27/10/2020 — வெற்றி வாரம் 2965
சுப்பர் ஜக்பொட் ரூ. 37,16,797 — வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 10 16 44 60 — கும்பம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
ரூ.500 பரிசுக்குரிய 6587 — ரூ.100 பரிசுக்குரிய 679
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,583,760

### அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1084
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.10.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 81,314,100/-
வெற்றி இலக்கங்கள் 19 27 29 40 — ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.27
சீட்டிழுப்பு இல. : 3414
வர்ணம் : இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,325,917.60
வெற்றி இலக்கங்கள் 08 13 16 27 — ஆங்கில எழுத்து Y
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3734
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 643
வர்ணம் இளம் சிவப்பு
திகதி 27.10 2020 செவ்வாய்க்கிழமை
Q 08 09 37 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,184,600
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

## அமைச்சர் ரமேஷ் பத்திரண அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கோவிட் - 19 தாக்கத்தினால் பொது மக்களின் மீன் கொள்வனவு குறைந்துள்ளது. இதனால் குவிந்துள்ள மீன்களை கொள்வனவு செய்வதற்கு.இலங்கை கடற்தொழில் கூட்டுதாபனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சருமான கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

தற்போது பல மீன்பிடி துறை முகங்களில் கடற்தொழில் கூட்டுத்தாபனம் மீன்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார். இதற்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கம் உடனடியாக இந்த விடயத்தில் செயல்பட்டு மீன்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நாட்டின் கடற்தொழில் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் இது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

3 தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நிலைமை தற்போது வழமைக்கு திரும்பியிருப்பதாகவும் 72 மணித்தியாலயத்திற்குள் மீன்களை கரைக்கு கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த வரையறையை நீக்கப்படுவதற்கு சுகாதாரத் துறை நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இதற்கமைவாக பிடிக்கப்பட்ட மீன்களில் ஒரு தொகையை கடற்தொழில் கூட்டுதாபனத்தினால் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

கடற்தொழிலாளர்கள் எதிர்கொண்டிருந்த பிரச்சினைகள் காரணமாக டின் மீன்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி நிவாரணத்தை நீக்கி இந்த மீன் விற்பனைக்கு தேவையான ஆற்றலை பெற்றுக் கொடுப்பதற்காக பெருந்தொகையில் டின் மீன்களை தயாரிப்பதற்காக டின்மீன் தொழிற்சாலைகள் அவற்றை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார். (ம-03)

# புலிகள் மீதான தடையை பிரித்தானிய நீதிமன்றம் நீக்கியது தவறு

## சுப்ரமணியம் சுவாமி டுவிட்

(கொழும்பு)

தவறான புரிதலின் அடிப்படையிலேயே, தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை பிரித்தானிய நீதிமன்றம் நீக்கியது என இந்திய பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரும் மாநிலங்கள் அவையில் உறுப்பினருமான சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் தளத்திலேயே இதை குறிப்பிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது.

"விடுதலைப் புலிகள் மீதான தடையை இங்கிலாந்து ஆணையம் நீக்கியுள்ளது. தவறான அடிப்படையில் இது செய்யப்பட்டுள்ளது. பிரித்தானியாவின் உள்துறை செயலாளர் மேல் முறையீடு செய்து இந்த தவறான உத்தரவை மாற்றி அமைப்பார் என நம்புகின்றேன்" என தெரிவித்துள்ளார். (ம-03)

# மணிவண்ணன் நீக்கத்துக்கு எதிரான மனு மீதான கட்டளை

## இன்று நீதிமன்றால் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விண்ணப்பம் மீதான கட்டளை இன்று வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் தவணை யிட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண் ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக் கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார் .

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர். அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை .யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து இன்று புதன்கிழமை இடைக்காலக் கட்டளை வழங்கப்படும் என்று நீதிபதி தவணையிட்டார்.(ம-3)

# 68 பொலிஸ் பிரிவில் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரையில் 68 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் 37 பொலிஸ் பிரிவுகளிலும், கொழும்பு மாவட்டத்தின் 19 பொலிஸ் பிரிவுகளிலும், களுத்துறை மாவட்டத்தின் 7 பொலிஸ் பிரிவுகளிலும், குருணாகல் மாவட்டத்தின் 5 பொலிஸ் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)


**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்பு ( சீர் செய்யப்பட்ட ) காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை. (4489)

தொடர்பு குரு : 077 805 1655



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (4487)

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/= (C 587)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட் - 1150/=

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், வசாவிளான் , குட்டியபுரம் அபிராமி அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய்.(300,000.00). தரகர் தேவையில்லை. (4489)

தொடர்பு குரு : 077 998 6806

**வரவேற்பாளர் தேவை**

K.K.S Road, கோண்டாவிலில் இயங்கும் எமது கல்வி நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை.

தகைமை : G.C.E O/L (C-591)

077 104 1923

**ஜோதிடம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (4422)

தொடர்பு - 077 572 9724

**லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?** காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

**அமெரிக்க அதிஸ்ட விசா**


2022ல் நீங்களும் அமெரிக்காவில்...


18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

0768226241

55000 இலவச விசாக்கள்

எந்தவித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் V2 Travels ல் பதிந்தோம் இன்று அமெரிக்காவில் வாழ்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்த V2 Travels க்கு எமது நன்றிகள். (C-505)

இன்னும் 08 நாட்களே உள்ளது



பிரகாஷ் - குடும்பம்

அமெரிக்கா விசா வெற்றியாளர்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ் 1150 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

**தவறி விட்டது**

இராசதுரை கிருபாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (751243600V), சாரதி அனுமதிப் பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம் உள்ளடங்கிய பேஸ் உரும்பிராய்ச் சந்திப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவவும். (C-592)

076 526 6717


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.